போன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 7—2—54 | இதழ் 32

★ அந்த வெண்மதி! ★

[- அரங்கண்ணல் -]

நண்பர்காள்!

மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளுகிறோம். தள்ளாத வயதில் ஏற்பட்ட விபத்து, நல்லவேளையாக நம்மிடமிருந்து அவரைப் பிரித்துவிடவில்லை. காயம், பலமானதுதான். தவறி வீழ்ந்ததன்விளைவாக, எலும்புகளும் முறிந்துபோய்விட்டன. எனினும், ஆபத்தில்லை. படுக்கையிலிருந்தும் மீள, இன்னும் பல மாதங்கள் பிடிக்கலாம். அதுவரையில் அவருக்கு வைத்யஉதவி செய்யவேண்டியிருக்கிறது. ஓரளவு பணம் தேவை. உங்களை நாடுகிறோம். அவரைக் காப்பாற்ற ஒவ்வொருவரும் ஏதாவது அனுப்பியுதவுங்கள்.

முகவரி:

15, பங்கிம் சந்திர சட்டர்ஜி தெரு

கல்கத்தா.

*

சாதாரணமான ஆளல்ல, அவர்! சாகாத வீரர் லெனினுடைய தோழர். பூத்துக் குலுங்கும் புது ரஷ்யாவில், வீரர்கள் பலர் வட்டமிட, கம்பீரமாகப் பவனி வந்தவர். அவருக்காகத்தான், மேற்கண்டபடி 1952 செப்டம்பர் திங்களில், கல்கத்தாவிலிருந்து வெளிவரும் வார ஏடொன்றில், வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. மிசௌரியில் உலவச் சென்றபோது, தவறி வீழ்ந்ததால், படுகாயமுற்றார்—அதிலிருந்து அவரை மீட்கப் பணமில்லை—எனவே, இந்த வேண்டுகோள் வெளியிடப்பட்டிருந்தது.

மாவீரர் லெனின்! — மங்காத அப்புகழ்ச் சுடரின் பெயரைக் கேட்கும்போதே, குதூகலம் கொள்ளும் வாலிபப் பட்டாளம், உலகெங்கும் இருக்கிறது. அவர்கூடப் பணியாற்றி, பிறகு சாகடிக்கப்பட்ட டிராட்ஸ்கியுடைய அருஞ்செயல்கள் ரஷ்ய சரித்திரம் காண்போரைக் களிக்கச் செய்யும். அத்தகைய மாவீரர்களுடன், தோளோடு தோளிணைந்து, மாஸ்கோ வீதிகளில் உலவிய மாண்பு மிக்கவர், அவர். அவருக்கு உதவி கோரி, வேண்டுகோள் விடப்பட்டிருந்தது!

இந்த வேண்டுகோளைக் கண்டோர், சிலரே. ஏனெனில், அத்தகைய மாவீரர்களோடு உலவிய பேரறிஞருக்கேற்பட்ட விபத்தையும், அவருக்கு நிதி உதவி தேவை என்பதைப்பற்றியும், இந்நாட்டு ஏடுகள் பிரசுரிக்கவில்லை. காரணம், அவர் ஒரு அறிஞர்! தன்னுடைய ஆராய்ச்சியாலும், விடா உழைப்பாலும், அறியாமையிலிருந்து விவேகபுரிக்கு மக்களை அழைத்துச் செல்ல போராடிய உத்தமர்!! அதைவிட மிகவும் 'மோசமான' மற்றோர் தகுதியும் அவருக்கிருந்தது. தான் பிறந்தது பட்டாச்சாரி குலமாகயிருந்தும், அந்தக் குல முறைகளைப் பற்றிக் கொஞ்சமும் அஞ்சாது, 'மதம் ஓர் முட்டுக்கட்டை' 'கடவுள் என்பது ஓர் கற்பனை' என்று துணிந்து, எழுத்தாலும் பேச்சாலும், எடுத்துக் கூறிவந்ததுதான். இப்படிப்பட்ட 'நாஸ்திகரை' இந்நாட்டு ஏடுகள், ஏறெடுத்துப் பார்க்குமா! அவர், லெனினின் தோழராயிருந்தாலென்ன—புது ரஷ்யாவின் சிற்பிகளுடன் 'உறவுகொண்டிருந்தவராயிருந்தாலென்ன—பூத்திருக்கும் சீனத்துக்கு விதை யூன்றியவராயிருந்தாலென்ன — அறிவுப்பாதைக்கன்றோ, அழைக்கிறார். அவரது பெயரை, பிறர் அறிய உரைக்குமோ ஏடுகள்?

ஏடுகள்மட்டுமா! இந்நாட்டு அரசியல் வானில் ஜொலிக்கும் அத்தனை தலைவர்களும்கூட, அவரைப் பற்றிச் சிந்தித்தது கிடையாது. அவ்வளவு தூரம், அவர்களாலெல்லாம் புறக்கணிக்கப்பட்டார். காரணம், அவர் ஒரு உண்மை விரும்பியாக இருந்தார்—நாட்டு மக்களின் வாழ்க்கையை, விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தார் —வீதியில் அலைவோனுக்கும் விசாரமில்லா மாளிகையில் உலவுவோனுக்கு மிடையிலிருக்கும் பேதம் ஒழியவேண்டுமெனச் சொன்னார். இத்தகைய கொள்கைகளை ஏற்பரோ, இங்குள்ள தலைவர்கள்! எனவே, அவர் புறக்கணிக்

கப்பட்டார். எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு, ஏச்சுப் பேச்சுக்காளாகி, மனம் நொந்துகிடந்த அம்மாவீரரை, நாம்மட்டும் அன்றும் மறந்ததில்லை—நம்மையும் அவர் மறந்ததில்லை. அதனால்தான், அம்மாவீரர், 'காலம் சென்றார்' எனும் செய்தியைக் கேள்வியுற்றதும், கலங்கினோம்—ஒரு வெண்மதி வீழ்ந்ததே! என்று விம்முகிறோம்.

*

ஆகாயத்தில் மின்னிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களை அனுதினமும், சந்திக்கிறோம். ஆனால், கருத்தைக் கவர்ந்து, களிப்பைத் தூவும், நிலவை என்றாவது ஒருநாள்தான், காணமுடிகிறது! அத்தகைய 'நிலவுகளை'க் காண்பது, அரசியல் வானில், அருமையான காரியமாகும். மக்களின் பெயரைச் சொல்லி, மகாபுருடர்களாகி, பிறகு தம்மை வாழ்த்திய அதே மக்களின் வாழ்க்கையில் மண்ணைத் தூவும் தலைவர்கள் மின்னுகின்ற இந்த நாட்களில், கொண்ட கொள்கைக்காக பற்பல இன்னல்களையேற்று, சாகும் வரையில் சங்கடங்களுக்கு இரையாகி அண்மையில் இறந்துபோன அறிஞர் எம். என் ராய் அவர்கள், நிலத்து நிலவு! மங்காத சுடர்! மறையாத நூல் நிலையம்!! அவரைப்பற்றி எண்ணும்போது, ஆஜானுபாகுவான அவரது உருவமும், திண்தோள்களும், கம்பீரக்குரலும் ஓடிவருகின்றன, உள்ளத்தில். அவர் தீட்டிவிட்டுச் சென்றிருக்கும் புத்தகங்களை நோக்கும்போது, பெருமூச்செறிகிறோம்.

எவ்வளவு பெரிய கருத்துச் சுரங்கம் அவர்! எத்தனை அருமையான புத்தகங்களை, வழங்கியிருக்கிறார் உலகுக்கு! அவரா, மறைந்துவிட்டார்? எண்ணமுடியவில்லை நம்மால்! அவரது எண்ணங்களைப்பற்றிச் சிந்திக்கும்போது, அறிவுப் பணியிலீடுபடும் எவரும் ஆனந்தமடையாமல் இருக்கமுடியாது. அவர்களால்மட்டுமே, பேரறிஞரின் பிரிவு — எவ்வளவு பெரிய நஷ்டம் — என்பதை உணரமுடியும்.

எம். என். ராய் — இந்திய மண்ணுக்குப் பற்பல வீரர்களை வழங்கிய வங்க மண்ணில் 1893ல் பிறந்தவர். வயது 20 ஆவதற்குள்ளாகவே, அவரது உள்ளம், அடிமைத்தளையை அறுக்கும் ஆவேசத்துக்கு ஆட்பட்டது. "இருந்திங்கே, அன்னியன் ஆள்வதா! இதனை நாம் சகித்துக் கொண்டிருப்பதா!!" என்று உள்ளம் குமுறிய அவர், அப்போது வங்கத்தில் உருவாகியிருந்த பலாத்காரவாதிகளுடன், பங்குகொண்டார். அந்தப் பலாத்காரவாதிகளின் கொள்கை, 'எடு, துப்பாக்கி! நட வெள்ளைக்காரன் வீட்டுக்கு!! சுடு, அவனை, என்பதாகும். இந்த விபரத்தைக் கேட்கும்போது, மயிர்க்கூச்செறியும். ஆனால் அந்நிய ஆதிபத்தியத்தை விரட்டவேண்டுமெனும் ஆவலில், தமது உயிரையும்பொருட்படுத்தாது, ஓங்காரக் கூச்சலெழுப்பிய இந்த வீரர்களைப்பற்றி எண்ணும்போது, ஓரளவு சிரம் வணங்கியே ஆகவேண்டும். அத்தகைய வீரர்களின் கூட்டுறவை 1903-ல் பெற்ற தோழர் ராய், 1906-ல் அரசாங்கக் குற்றவாளியானார். கொள்ளையடித்த வழக்கு சம்பந்தமாகக் கைதானார். ஒருமுறை சிறைப் பறவையாகிவிட்டால், பின் இலட்சியம் ஈடேறும்வரை, பலமுறை சிறைக் கதவுகள் திறந்து மூடுமல்லவா? அதன்படி அறிஞர் ராய் 1908ல் வங்காள சதிவழக்கிலும், 1914ல் கொள்ளை வழக்கொன்றிலும் சம்பந்தப்படுத்தப்பட்டார். இந்நிலையில், உலகில் பெரும் மாறுதல்களை உண்டுபண்ணிய முதல் மகாயுத்தம் மூண்டது. அப்போது இந்த வங்கப்புதல்வர் மேற்கொண்ட செயல், சாதாரணமானதல்ல. தந்திரமாக இந்தியாவைவிட்டு வெளியேறி, சீனா சென்றார். அங்கிருந்து அமெரிக்க நாட்டுக்குப் பிரயாணமாகி, மெக்சிகோவுக்குச் சென்றார். அங்கு சென்று, வீணே இருக்கவில்லை. பொதுவுடைமைக் கட்சியை நிறுவினார். வங்கப் புதல்வர் மெக்சிகோவில பொதுவுடைமைக் கட்சியை நிறுவினார்! உள்ளூரில் முற்போக்கு இயக்கங்கள் தோற்றுவிப்பதென்றாலே, எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்கவேண்டும். ஆனால், அவரோ, அந்நியநாடு சென்று அந்த பொதுவுடைமைக் கட்சியை நிறுவி, அதற்கெனப் பாடுபட்டார்!

அவருடைய ஆர்வமும், உழைப்பும் ரஷ்ய மண்ணின் தலைவர் லெனினுக்கு எட்டியது. ராய், புறப்பட்டார், மாஸ்கோ நோக்கி! அங்கு நுழையவேண்டுமென்றால், அனுமதிவேண்டும்—இவரோ, இந்தியாவின் துரோகி என வெள்ளையர்களால் வர்ணிக்கப்பட்டவர் — இவரை பிறதேசத்து அரசுகள், விடுமா? அதனால், வேறோர் பெயர் வைத்துக்கொண்டு, ஸ்பெயின், பிரான்ஸ், ஜர்மன் ஆகிய இடங்களைக் கடந்து மாஸ்கோ சென்றடைந்தார். அங்கே லெனினைச் சந்தித்து, தொடர்பு கொண்டார். இவரின் நற்குணங்களையும், திறமையையும் கண்ட லெனின், ஆசியா சம்பந்தமான ஆலோசனைகளையும் பெற்றுவந்தார்! அதுமட்டுமல்ல, ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார் — லெனின் காலத்தில், சிறந்த பேச்சாளராகவும், மக்களின் சிந்தை கவர் செல்வனாகவும் விளங்கிய மற்றோர் மாபெரும் ரஷ்ய வீரர் டிராட்ஸ்கியாகும்! இவரது வாழ்வு. பின்னர் ரஷ்ய மண்ணிலிருந்து கிள்ளியெறியப்பட்டது. அது, ஒரு, சோகச் சுருள்! அத்தகைய வீரராம் டிராட்ஸ்கியும் ராயும் சேர்ந்துழைத்தனர். அகில உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகவும் ராய் இருந்தார்! வங்க மகன், ரஷ்ய மாதாவின் ஒளி விளக்குகளின் மத்தியில், சிறப்பு பெற்ற இந்தச் சீரிய சம்பவங்களை அவர் எழுதியுள்ள கட்டுரைகளில் படிக்கும்போது, பரவசம் தரும்.

அவ்வளவு பெரும் புகழும் பெற்று விளங்கிய தோழர் ராய், பிறகு, சீனா சென்றார். அன்றைய சீனா, சியாங்கேஷேக்கின் தலைமையில் கிடந்தது. 'அங்கே புதுயுகம் காணப் போராடிய கம்யூனிஸ்டுகளுக்கு ஊக்கம் அளித்து, உற்சாகமூட்டுவதற்காக, 1927-ல் ரஷ்யாவின் சார்பில், ராய், அனுப்பப்பட்டார். இவ்வண்ணம், பல எல்லைகளைத் தாண்டி, வெளிநாடுகளிலெல்லாம் புதுமைக் கொள்கைகளுக்காகப் போராடிய ராய், பிறகு, ரஷ்யாவிலிருந்து, திரும்பினார்—அவருக்கும், அங்கிருப்போருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக, திரும்ப நேர்ந்தது.

1930-ல் இரகசியமாக இந்தியாவுக்குள் நுழைந்த அவரை, வெள்ளையராசாங்கம் கைது செய்தது. மீரத்தில் நடைபெற்ற சதிவழக்குக்கும் அவருக்கும் தொடர்பேற்படுத்தி, ஆறு ஆண்டு சிறைவாசம் அளிக்கப்பட்டது. அந்தசதி நடைபெற்றதாகக் கூறப்பட்ட 1924-ம் ஆண்டில் தோழர் ராய், இந்தியாவிலில்லை, ரஷ்யாவிலிருந்தார். ரஷ்யாவிலிருந்தபோது 1922-ல் "வான் கார்டு" எனும் ஏட்டையும் 1928-ல் 'மாசஸ்" எனும் இன்னோர் ஏட்டையும் நடத்தினார். மாஸ்கோவில், கீழ்நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றையும் நிறுவி, அதன் தலைவராக 1927 முதல் பணிபுரிந்திருக்கிறார். அத்தகையவர், இந்தியாவுக்குள் நுழைந்த செய்தியை அறிந்த ஆதிக்கக்காரர்கள் சும்மாயிருப்பார்களா? அதனாலேயே, அவர்மீது குற்றம் சாட்டி ஆறாண்டு தண்டனை வாங்கித்தந்தனர். ஆறாண்டுக் காலத்தைச் சிறையில் கழித்துவிட்டு 1937-நவம்பர் திங்களில் விடுபட்ட அவரை, இந்திய தேசிய காங்கிரஸ், இருகை நீட்டி வரவேற்றது! அகில உலகமெங்கும் புகழ்பரப்பி, சிறைக்கூடத்துக்குள் காலத்தைக் கழித்துத் திரும்பிய அவரை, காங்கிரசின் செயலாளராகயிருக்குமாறு எல்லோரும் கேட்டுக்கொண்டனர். ஆனால், தோழர் ராய், அப்பொறுப்பை உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. காங்கிரசில் சேர்ந்த அன்று, அவரும் காந்தியாரும் நெடுநேரம், உரையாடினாராம். பிறகு அன்று மாலை நடைபெற்ற, பிரார்த்தனைக் கூட்டத்துக்கு ராயைக் காந்தியார் அழைத்தாராம். ஆனால், ராய் மறுத்துவிட்டார்.

இவ்வண்ணம் புரட்சி எண்ணங்கள், இதயத்தில் எரிய, பொங்கிடும் ஆர்வக்கடலாக விளங்கிய தோழர் எம். என். ராயைக் கண்ட காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கக்காரர்களாயிருந்தோர், அவர் மீது அசூயையும் அருவருப்பும் கொள்ளலாயினர். இதனால், ராம்காரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் போது தலைவர் பதவிக்கு நின்றார். ஆனால் அவரை எதிர்த்து தோழர் அபுல்கலாம் ஆசாத்தை நிறுத்திப் பலர், வேலை செய்தனர். அதன் விளைவாக அவர் தோல்வியுற்றார்!

என் வாழ்வில்...........!

—✱—

“பதினைந்தாவது வயதில், அரசியல் வாழ்வில் புகுந்தேன். என் அரசியல் வாழ்வு, பலனற்றுப் போயிருக்கலாம்; ஆனால், நான் சுதந்திரமாக இருக்க நினைத்தேன். அந்த நினைப்பால், உந்தப்பட்ட நாங்கள், அந்தக் காலத்தில் மார்க்சைப்பற்றி அறிந்ததில்லை; படித்ததில்லை. உழைக்கும் மக்களிருக்கிறார்கள் என்பதுகூட எங்கட்குத் தெரியாது. இருந்தும் எங்களில் பலர் சிறைக்குச் சென்றோம்; தூக்குமேடைக்கும் செல்ல நேரிட்டது. அவர்களைப்பற்றி, எந்த ஏழையும், அப்போது நினைக்கவில்லை! வர்க்கப்போராட்டம்பற்றிய நினைவு எவருக்கும் கிடையாது. கம்யூனிசம் பற்றிக் கனவிலும் கருதியதில்லை, நாங்கள். ஆனால், வாழ்க்கை ஒரு பெருஞ்சுமையாக இருப்பதையும், அந்தச்சுமையை உதறித்தள்ளி சுகம் பெறவேண்டும் என்கிற எண்ணமும் எல்லோருடைய உள்ளத்திலும், எரிந்து கொண்டே இருந்தது. எப்படி இவைகளைச் செய்வது? இதுபற்றி அவர்களுக்கு திட்டமான முடிவுகள் கிடையாது. ஆனாலும், அவர்கள் ஆவேசமாக ஈடுபட்டனர். அந்த ஆவேசம்தான் என்னையும் அரசியல் வாழ்வில் ஈடுபடுத்திற்று; இன்றும் அன்று பெற்ற உணர்ச்சிதான் என்னை ஊக்குவிக்கிறது. நான் படித்த மூன்று 'மார்க்சின்' நூல்களைவிட, இந்த ஆர்வமே, இன்றும் எனக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அந்த ஆர்வம், சுதந்திர வேட்கையால் உருவானது! இந்த வேட்கைதான், உலகத்து மனிதர்களை ஆட்டிப்படைக்கிறது. இந்த வேட்கைதான் முதலாளிகள் உலகையும் நிலப்பிரபுத்துவ முறைகளையும், உண்டாக்கியது. இதே ஆசை — சுதந்திரமாக வாழவேண்டும் என்கிற வேட்கை—எதிர்காலத்தில் புதியதோர் உலகைப் பூக்கச்செய்யும்! கனவை, நனவாக்கும்!!”

எம். என். ராய்.

அந்தத் தோல்வியைக் கண்டோர், திகைத்தனர். ராம்காரில், நிச்சயம் இவருக்கு, ஆதரவு கிடைக்குமென்றே, எல்லோரும் நம்பினர். ஆனால், இவர் தோற்கடிக்கப்பட்டார்! இதன் காரணமாக வளர்ந்த அதிருப்தியின் காரணமாக, 1940-ல் காங்கிரசை உதறி விட்டு, 'ராடிகல் டெமாகிராடிக்' கட்சியையும், 'இந்தியன் பெடரேஷன் ஆப் லேபர்' என்றோர் தொழிலியக்கத்தையும் துவக்கினார். ஆனால், வளர்ந்து நின்ற காங்கிரசின் குரலுக்கு முன்னும் பணபலத்தை எதிர்த்தும், இவருடைய குரல், ஒலிக்க முடியவில்லை. இந்தக் கட்சியை ஆரம்பித்த காலத்தில், காங்கிரசின் எதிர்காலம் பற்றி, அவர் என்னென்ன கூறினாரோ, அதையெல்லாம் இன்று நாம் கண்முன்னர் காண்கிறோம்! அந்தக் கட்சியை ஆரம்பித்த பிறகு, அவர் தென்னாட்டுக்கு வந்தார். அப்போது, இரண்டாவது உலகப் போர், நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாசீசம், நாஸிசம் இரண்டும் ஒழிய வேண்டுமென்பதற்காக, அவர் பாடுபட்டார். அதன் காரணமாக, அப்பெரும் போருக்கு வேண்டிய உதவிகளைத் திரட்டினார். அப்போது, தென்னாட்டுக்கு வந்த அவரை நமது சுயமரியாதை இயக்கம், வரவேற்றது. பெரியாரும், அவரும் பல இடங்களில் பேசினர். அவரது விசாலமான அறிவையும், பொதுப் பணியின் ஆர்வத்தையும் கண்டோர் "அம்மாவீரர் இங்கேயே தங்கிவிடலாமே! ஏன் வடநாட்டுத் திமிங்கிலத்தோடு மாரடிக்க வேண்டும்! வளர்ந்து வரும் சுயமரியாதை இயக்கம் அவர் பக்கம் நின்று ஒத்துழைக்குமே!" என்றெல்லாம் கருதினர். பல வாலிபர்கள், 'தோழர் எம். என். ராய் சுயமரியாதை இயக்கத் தலைவர் ஆவார்" என்றும் கனவு கண்டனர். கனவு, அப்போதிருந்த சூழ்நிலையின் காரண

மாக பலிக்கவில்லை! அவரும் இசையவில்லை!! அவர் தென்னாட்டைவிட்டுச் செல்லும்போது கூறிய வாசகங்கள் மிக மிகக் குறிப்பிடக்கூடியதாகும். "தென்னாடு சென்றிருந்தேன்—திராவிடக் கட்சியின் ஆதரவைப் பெற்றேன். என்னுடைய எண்ணப்படி வளரும் கட்சி, அதுதான். அது, எனக்குப் பக்க பலமாக இருப்பது பெருமகிழ்ச்சியை அளிக்கிறது."

இந்தத் தொடர்பு, நமக்கும் அவருக்குமிடையே நெருங்கிய நட்பை வளர்த்தது. அதுமுதல் நமது இயக்க வளர்ச்சியில், அவர் ஆர்வம் காட்டினார், அத்தகைய அறிவு மேதையாக—உலகமெனும் அரங்கில் உன்னதமாகப் பணியாற்றிய ஒரு அரசியல்வாதியாக விளங்கிய—தோழர் எம். என். ராய் அவர்களுக்குத்தான், வைத்ய உதவி செய்வதற்குப் பணமில்லையென்று வேண்டுகோள் விடுத்தனர்! அதனை எடுத்துப் போடவும், இந்நாட்டு ஏடுகள் இசையவில்லை!!

*

நரேந்திரபட்டாச்சார்யா— எனும் பெயர் பூண்ட இவர், தன்னுடைய இளமைக் கால முதல், சாகும்வரை பொதுப்பணிக்காகத் தம்முடைய வாழ்க்கையைத் தத்தம் செய்த பெரியார். உலகத்தில் நடைபெற்ற இரண்டு பெரும் புரட்சிகளுக்குப் பங்கேற்ற ஒப்பற்ற வீரர். ரஷ்யாவும், சீனாவும், அவரது உழைப்பைப் பெற்றுக்கொண்டதுண்டு. அத்தகைய ஒரு விடுதலை வீரரை, இந்திய காங்கிரஸ், மூக்குடைத்து மூலையில் வீழ்த்திற்று.

அவர் கூறும் கொள்கைகள், மூடநம்பிக்கையை ஒழித்து, அறிவுப் பாதைக்கு வழிகாட்டுவதாக இருந்ததால், இந்நாட்டு ஏடுகள் யாவும், அவரைப் பகிஷ்கரித்தன. லண்டன் – நியுயார்க் – பாரிஸ் – மாஸ்கோ–பீகிங்–டெய்ரோ—இவையெல்லாம், அவர் எண்ணங்களைப் படிக்கவும் கேட்கவும் தயங்கவில்லை. இந்நாட்டு அதிபதிகள், அஞ்சினர்–அவர்களின் ஏடுகள், மிரண்டன. கடைசிக் காலத்தில், அவருக்கு வேண்டிய உதவியைச் செய்யவும் தயங்கின. இறந்தபின், அவருக்குக் காட்டவேண்டிய மரியாதையையும் மறந்தன. இந்தளவுக்கு, இவர்களால் புறக்கணிக்கப்பட, என்ன செய்தார், அவர்? இந்த நாடு ஒழிய வேண்டும் என்றாரா! இங்கிருப்போரை யெல்லாம் தூக்கிலேற்ற வேண்டும் என்றாரா!! இல்லை—நாடு வாழ—நாட்டு மக்கள் மகிழ—நல்லதோர் ஆட்சி மலரவேண்டும் என்றார். "கொண்டதே கோலம்—கூறியதே கொள்கை!" என்று பிடிவாதம் செய்யவில்லை. லெனினும் மார்க்சும் காட்டிய பாதையிலேயே செல்லவேண்டும்—என்று உரத்து முழக்கமிடவில்லை. "கருத்துக்கள் காலத்தையொட்டிமாறும்! நாட்டையொட்டி மாற்றிக்கொள்ள நேரும்!! மார்க்சு போதித்த பாதை நல்லதோர் பாதை. அதை அப்படியே, இந்திய மண்ணுக்கு இறக்குமதி செய்யவேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால், அது கூறும் நல்ல இலட்சியங்களுக்கேற்ற வகையில் நமக்கென ஓர் பாதையை வகுத்துக் கொள்ளவேண்டும்! இதோ, நான் கூறுகிறேன் — ஒரு நல்வழி. இதனையே எல்லோரும் ஏற்கவேண்டுமென, கூறவில்லை. சிந்தித்து—செயலாற்ற முனையுங்கள்" என்று செப்பினார்.

இவ்வண்ணம் அவர் கூறிய சொற்களால், காங்கிரஸ் ஆதிக்கக்காரர்கள் மட்டுமல்ல, சில அதிதீவிரபுரட்சியுள்ளம்கொண்ட கட்சியினரும் கூட, அவர் பால் எரிச்சல் கொண்டனர். இதனால், வடநாட்டில் வாழ்ந்த அவர் வாழ்வு, ஒரு போராட்டமாகவே முடிந்தது. "ராடிகல் ஹியுமனிஸ்ட்" என்றோர் ஏட்டை நடத்திக்கொண்டு அதன் மூலம், அவரும் அவரது துணைவியார் எலேன்ராயும் காலத்தைக் கழித்தனர். மக்கள் மன்றத்தில் செல்ல வேண்டிய அவரது கருத்துக்கள் ஒரு சில நண்பர்கள், ஓய்வு நேரத்தில் கூடி வாதிடக்கூடிய அளவுக்குத் தேய்ந்துபோயிற்று! சிந்தனைச் செல்வர், அவர். இந்த ஒரே குற்றத்தால், இந்த உபகண்டத்து, அரசியல் உலகம், அவரை கூண்டுக்கிளியாக்கி, வதைத்துவிட்டது.

வங்கத்திலிருந்து தோன்றிய புரட்சிப் பொறிகள், ஏராளம்! அவர்களில் பலர், பற்பலவிதமாகப் போய்விட்டனர். அவ்விதம் பலாத்கார இயக்கத்தில் ஈடுபட்டு, அரசாங்கத்துக்குப் பயந்து, புதுச்சேரி புகுந்தார், அரவிந்தர். அவரைப் போற்றுகிறது, உலகம்! சாகும்வரை, ஒரு சாம்ராஜ்யாதிபதிபோல், வாழ்ந்துவிட்டு உயிர் துறந்தார். இன்றும் அவரிருந்த இடம், ஒரு யாத்ராஸ்தலமாகக் கருதப்படுகிறது காரணம், அவர், யோகியானார்—நாட்டின் ஆதிக்கக்காரர்களாம், மதவாதிகளுக்கேற்ற வார்த்தைகளைச் சொன்னார். அதனால் பணதிபதிகள் அவரை வட்டமிட்டனர்! ஏடுகள், அவரைச் சூழ்ந்து நின்றன! இன்பத்தின் உச்சியில், தன்னுடைய நாட்களைக் கழித்துவிட்டு மறைந்தார், அவர்.

ஆனால், அவரைவிட, ஏராளமான அடக்குமுறை அம்புகளை, சமூகத்தின் நல்வாழ்வுக்காகத் தாங்கி, கடைசிவரையில் "மனிதனாக" வாழ்ந்த, இம்மாவீரருக்கு, பணஉதவிக்கு வேண்டுகோள்விட நேர்ந்தது! அவருடன் உலவிய தோழர்கள்—அவரைவிட எல்லா வகையிலும் மட்டமான தோழர்கள்—ஆட்சிப்பீடத்திலும், அதிகார நாற்காலியிலும் அமர்ந்து, கோலோச்சினர்—தர்பார் புரிந்தனர். ஆனால், இவரோ, கவனிப்பாரற்று கல்கத்தாவிலுள்ள தன்னுடைய இல்லத்தில், நூல்களை எழுதி அதன்மூலம் வரும் வருமானத்தைக்கொண்டு நாட்களை, நகர்த்தினார். வாழ்வுக்காக, தன்னை, யோகி என்று கூறவில்லை—காசுக்காக, தன்னுடைய தலையைக் கவிழ்த்து தண்டனிடவில்லை-வீரராக வாழ்ந்தார்! வீரராக மறைந்தும் விட்டார்!!

இரண்டாண்டுகளுக்கு முன்பு தவறி வீழ்ந்ததால் படுகாயமடைந்த அவர் உடல், பிறகு நல்லநிலைமைக்கு வரவில்லை. அதுவே மனவியாதியாகி ஜன. 25-ந்தேதி நம்மிடமிருந்து பிரித்தெடுத்துக்கொண்டு போய் விட்டது. அவரைப்பற்றி நினைக்கும் போது, எவ்வளவோ எண்ணங்கள் ஓடி வருகின்றன

ஒரு சிறந்த மாவீரர், அவர்! நமக்கெல்லாம், நல்லதோர், வழிகாட்டியாக இருந்தவர்-நம்மிடையே இருந்திருக்க வேண்டிய மாணிக்கம் —எனினும், தொலைதூரத்திலிருந்

தானும் நம்மீது அபார நம்பிக்கை வைத்திருந்தார் — நாம், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியபின் நமது பொதுச் செயலாளரைப் பற்றி தனது ஏட்டில் கட்டுரை யொன்றைப் போட்டு, நமக்கெல்லாம், உணர்ச்சியூட்டினார். அத்தகைய ஒரு மதி வல்லுனரை — நல்மார்க்க சீலரை—நாடு இழந்து விட்டது! இந்த இழப்பினை, நாடாளும் கட்சி, இன்று உணரவில்லை—ஏடாளும் கூட்டமும், உணர்ந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. எனினும், இன்றல்ல, என்றும் அவர், இங்கு இருப்பார்-அத்தகைய அழியாத அறிவு நூல்களை, அவர் வழங்கிச் சென்றிருக்கிறார். அவர் பெயர், மக்கள் மன்றத்தில், விளங்கும்—வாழும்—வழிகாட்டும்.

★

எது, காரணம்?

—✲—

'எல்லைக் காந்தி' கான் அப்துல் கபார்கான், பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுபட்ட செய்தி கேட்டு, நாடே மகிழ்ந்தது. பண்டிதர், மகிழ்ச்சிச் செய்தி அனுப்பினார்.

ஆனால்,

'காஷ்மீரச் சிங்கம்' ஷேக் அப்துல்லாவை, சிறையிலே பூட்டிவிட்டு, அரசியல் பொம்மலாட்டம் நடைபெறுகிறது, காஷ்மீரத்தில்.

'எல்லைக் காந்தி', 'அப்துல்லா' இருவரும் நேருவின் நண்பர்கள் தான்! இந்திய தேசிய காங்கிரசின் இணையில்லா வீரர்கள் தான்.

ஆனால்;

'எல்லைக் காந்தி'யின் விடுதலையைக் கேட்டு மனமகிழும்போது, தன் பிடியில் கிடக்கும் காஷ்மீரத்தில் அடைபட்டுக் கிடக்கும் அப்துல்லாவைப்பற்றி, பண்டிதர் சிந்திக்காததேன்?

அது, பாகிஸ்தானில் — இது, இந்துஸ்தானில், என்பதா! அது, கேடு—இது, நல்லது, என்பதா!! எது, காரணம்?

✲

"புயல்" பரவுமாம்!

"அட, ராமச்சந்திரா!"

"யார்—இந்த ஆசாமி?"

"பேசாதே! போ—போ!!"

"ஏனய்யா, நிற்கிறாய்? உனக்கென்ன, இங்கு வேலை!"

"விரட்டுங்கள்! இல்லையேல், நாங்கள் விரட்டுவோம்!!"

✻

ராமச்சந்திரன், என்ன செய்வார்? திகைத்தார்! விழித்தார்!! அவரைப் பேச அழைத்த டாக்டர் சுப்பராயன், எழுந்தார் — வேண்டுகிறேன், என்றார். கூடியிருந்தோர், கேட்டால்தானே? கூக்குரல்! கலவரம்! ஓவென்ற கூச்சல்! மாநாடு, புயல் புகுந்த இடமாகி, போர்க்களமாகியது. அழையாத, வீட்டுக்கு நுழையாத விருந்தினராகக் கொண்டு வரப்பட்ட ராமச்சந்திரன், ஏமாற்றத்தோடு, மேடையிலிருந்து இறங்கினார்.

✻

கடந்த வாரத்தில் சென்னை மாநகரில், இந்தச் சம்பவம், நடைபெற்றது. எங்கோயிருந்த ராமச்சந்திரனை, தனக்கு வேண்டியவர் எனும் தகுதியைக் கொண்டு, இழுத்து வந்து, 'கௌரவ ஆலோசகர்' எனும் முடியைச் சூட்டினார், முதலமைச்சர் ஆச்சாரியார். அந்த ராமச்சந்திரனுக்கே, இவ்வித 'மரியாதை' வழங்கப்பட்டது — சென்னையில் கூடிய மாநில பஞ்சாயத்துப் போர்டுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில். 3000—க்கு மேற்பட்ட பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினர்கள் கலந்து கொண்ட அம்மாநாட்டில், அன்பர் ராமச்சந்திரன், வந்தார்—அவர்மீது, எவருக்கும் எவ்விதக் கோபமுமில்லை; துவேஷமுமில்லை. ஆனால், அவர் சாதாரணமாக அல்ல, வந்தது! சர்க்கார் கொண்டு வந்து அமுல் நடத்திவரும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேச வந்தார். சர்க்காரின் கல்வித் திட்டம், கிராமங்களில்தானே நடைபெற்று வருகிறது! எனவே கிராமப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளுக்கு அதைப் பற்றி எடுத்துச் சொல்லி, விளக்க மூட்டவேண்டும் எனும்பேராவலில், தோழர் ராமச்சந்திரன் வந்திருக்கிறார்!! ஆனால், பிரதிநிதிகள், முதலில் 'யார் இந்த ராமச்சந்திரன்?', என்று அமைதியாகவே கேட்டிருக்கின்றனர். 'இவர்தான் ஆச்சாரியார் நியமித்த கல்வி ஆலோசகர்', என்று தெரிந்ததும், தூங்கிக்கிடந்த புலிகள் போல், சீறியிருக்கின்றனர். விளைவு, வேதனையாக முடிந்திருக்கிறது, ராமச்சந்திரனுக்கு.

கல்வி சம்பந்தமாக சர்க்காருக்கே ஆலோசனை கூறும் அருகதையில் அமர்த்தி உட்கார வைக்கப்பட்டிருக்கும், இவர், 'தான் எங்கு போகலாம் — எங்கு போகக்கூடாது', என்பது பற்றிக்கூட ஆலோசனை செய்யாமல் வீணே நுழைந்து, வேதனையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்! ஆச்சாரியார் கொண்டு வந்து அமுல் நடத்தி வரும் ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றி கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் கொதிப்பினை, அளவிட்டுக் கூற முடியாது.

அதன் விசித்திரங்களுக்கு ஆளாகி, வாதனைப்பட்டுக்கொண்டிருக்கும் கிராமப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளுக்கு, இவரென்ன ஆலோசனை வழங்குவது? விஷத்தை விழுங்கி, வேதனைப்பட்டுக்கொண்டிருப்போருக்கு, அதன் அருமை பெருமையை உரைக்க ஆலகால விஷத்தின் 'ஸ்டாக்கிஸ்ட்' சென்றால், வரவேற்பா கிடைக்கும்! அதுவே, சென்னையில் நடைபெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவம், இலேசானதல்ல

நன்றி

பொங்கல் விழாவின்போது வாழ்த்துகள் அனுப்பிய கழகத் தோழர்களுக்கு நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரங்கண்ணல்

—ஏனெனில், பஞ்சாயத்துபோர்டுகளின் பிரதிநிதிகள், கட்சி சார்பற்ற முறையில் கூடி, தங்கள் பிரச்னைகளை, சென்னை மாநாட்டில், விவாதித்திருக்கின்றனர் — அமைச்சர் ராஜாராம் வந்தபோதும், டாக்டர் சுப்பராயன் தலைமை வகித்தபோதும், அவர்களுக்கு எவ்வித ஆத்திரமும் வரவில்லை. மந்திரி ஏதாவது மார்க்கம் உரைப்பாரா, கிராம முன்னேற்றத்துக்கு — தலைவர் ஏதாவது வழிகள் தருவாரா, அரசாங்கத்திடமிருந்து ஆதரவு பெறுவதற்கு என்கிற அக்கரையோடு காணிருந்திருக்கின்றனர், மாநாட்டில். ஆனால், இந்தக் கல்வி ஆலோசகர் புகுந்ததும், அவர்கள் உள்ளத்தில் தூங்கிக் கிடந்த ஆத்திரம், தூண்டியிருக்கிறது! தங்கள் கோபத்தையெல்லாம் கொட்டியிருக்கின்றனர்—ஆலோசகர் வந்தவழியே திரும்பியிருக்கிறார். 2800க்கு மேற்பட்ட பஞ்சாயத்து போர்டுகளின் சார்பில் நடைபெற்ற இம்மாநாட்டில், இச்சம்பவம் நிகழ்ந்ததென்றால், அது கூறும் பாடம் இலேசானதல்ல. ஏற்கனவே, இந்தப் பஞ்சாயத்துக்களில் பல, ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தைக் கண்டித்து, தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன. அவைகளைப் பொருட்படுத்தாது, மாதங்கள் பல ஆகிவிட்ட பிறகு, கல்வித் திட்டத்தின் அருமை பெருமைகளை உரைக்க, ஆலோசகர் ஏன் செல்ல வேண்டும்?

அருமையான வெல்லம் என்றால், அதன் ருசியைக் கேள்விப்பட்ட மக்கள், வெல்லக்கடைக்குச் சென்று விலை கேட்டு வாங்கத்தான் செய்வார்கள்! அதை விட்டுவிட்டு, 'நான் வைத்திருக்கும் வெல்லம், அருமையானது—ருசி மிக்கது' என்று தூக்கிக்கொண்டு, மக்கள் கூடுமிடமெல்லாம் சென்று, கூறிக்கொண்டே இருந்தால், இந்தக் கூச்சலை எத்தனை நாட்களுக்குத்தான் மக்கள் சகிப்பர்? அதிலும், ஆச்சாரியார் தயாரித்த வெல்லம், சின்னஞ்சிறுவர்களைப் படுத்திவைக்கும் பாடு, செப்பும் தரமன்று, கிராமப் புறங்களில் சென்று பார்த்தால், கல்வித் திட்டத்தின் கதி தெரியும்—

“என்ன சார் செய்யறது? காலையில் வரும் குழந்தைகளை மாலையில் வராதே என்று சொன்னால், குழந்தைகளின் பெற்றோர், சண்டைக்கு வருகிறார்கள்!”

“சர்க்காரின் உத்தரவைச் சொல்லி—உங்கள் மகனுக்கு, இன்று தொழில் வகுப்பு. வண்ணார் வீட்டுக்கு அனுப்பவா! குயவர் குடிசைக்குக் கொண்டுவிடவா!!—என்று கேட்டால், கோபித்துக்கொள்கிறார்கள், கிராம மக்கள்”

“அரைநாள்தான் பள்ளிக்கூடம் என்று சொன்னால், 'போதுமய்யா! உன் பள்ளிக்கூடத்தில் படித்தது' என்று சொல்லி, வீட்டுத் திண்ணைகளில், யாரையாவது அழைத்து வந்து, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க முயற்சிக்கிறார்கள்”

'டெபுடி இன்ஸ்பெக்டர்கள் வந்தாலோ, அட்டெண்டன்ஸ் காட்ட முடியவில்லை. பள்ளி, காலியாயிருக்கிறது. இதனால், 'கிராண்டை' நிறுத்திவிடுவோமென்கிறார்கள்”

“குழந்தைகளும் வராமல், சம்பளமும்வசூலாகாமல், இத்தனை ஆசிரியர்களை வைத்துக்கொண்டு எப்படிக் காலந்தள்ள முடியும்?”

சர்க்காரின் உதவிபெற்று நடைபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று, மானேஜ்மெண்டாரைக் கேட்டால், இவ்விதம் வேதனைப்பட்டியலை விரிக்கின்றனர்—கிராமத்தில் எவ்வளவோ, கஷ்டப்பட்டு பிள்ளைகளைக் கல்விச்சாலைக்கு அழைத்து வரவேண்டியிருக்கிறது! ஆனால், இந்தக் கல்வித் திட்டத்தால, இவ்வளவு நாள் பட்ட கஷ்டங்களையெல்லாம், இழக்க நேரிடுகிறது.

இந்த நிலையில்,சர்க்காரிடமிருந்து வரும் தாக்கீதுகளுக்கோ, குறைச்சலில்லையாம். அடிக்கடி 'ஆரம்பக் கல்வித்திட்டம்பற்றி, 'ரிபோர்ட்' அனுப்பு' என்கிறார்களாம். 'ரிபோர்ட்' அனுப்புவதா, கஷ்டம்? தயார் செய்து, அனுப்பப்படுகிறது! அதைக் காட்டிச் சங்கநாதம் செய்கிறார், ஆச்சாரியார்!!

இந்த 'விபத்துக்களில்' இருந்து தப்பும் நோக்குடன்தான், ஆச்சாரியார் நியமித்த கல்விப் பரிசீலனைக் குழு, மிகத் தந்திரமாகச் சொல்லிற்று — “நாங்கள் பல பள்ளிக்கூடத்துக்குச் சென்று பார்வையிடவில்லை. ஏனெனில், இப்போதுதான் அவர்கள் புதுக்கல்வித் திட்டத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்” என்பதாக.

இந்த விளக்கங்களையும்—புகைப்படங்களையும் — ஆதார ரிபோர்டுகளையும், நகரங்களில் காட்டலாம்; பத்திரிகையில் பிரசுரிக்கலாம்; எதிர்க் கட்சிகளைத் தாக்கப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் கல்வித்திட்டத்தின் விளைவுகளை அனுதினமும் அனுபவிக்கும் கிராமப் பிரதிநிதிகளிடமா, கதை அளக்கக் கிளம்புவது? முன்பின் ஆலோசியாமல் சென்றார், ராமச்சந்திரன்! மூக்குடைபட்டுத் திரும்பியிருக்கிறார்!!

* * *

சட்டசபை — சகல கட்சிகள் — கற்றோர் — பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் — ஆசிரியர்கள் சங்கம் — இவ்விதம், யாரார் எதிர்க்க வேண்டுமோ, அத்தனை பேரும் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றனர். மேல்சபை — கீழ்சபை எங்கும் கண்டனமாரி. சொந்தக்

சீறினாராம்!

கல்யாணியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டு மேடையில், அடிக்கடி நேரு, சீறிக் கொண்டிருந்தாராம்! காரணம், மேடையிலிருந்த தலைவர்கள் யாவரும், மாநாட்டைப் பற்றிக் கவலைப்படாது, தத்தமது சொந்த விஷயங்களைப் பற்றி உரத்துப் பேசிக்கொண்டிருந்தனராம். அவர்களைப் பேசாமலிருக்குமாறு செய்யவே, 'உஸ்! உஸ்! என்று நேரு, சீறினாராம். இந்தச் செய்தியை வெளியிடும், ஏடு, கூறுகிறது, ஏனோதானோக்களல்ல அவரைவிட வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்கள், என்று!! பெரியவர்களின் நிலையே, இப்படியாகிவிட்டதென்றால்—காங்கிரஸ் கலகலத்துச் சீரழிவதற்குக் காரணமும், வேண்டுமோ? என்று கேட்கிறார்' உள்ளூர் நண்பர்!

கட்சியிலும் தூற்றல்—வசைச்சொல். இவ்விதம் எல்லோரது கண்டனத்துக்கும் ஆளான ஒரு திட்டத்தை எங்கும் காணமுடியாது. எனினும், ஆச்சாரியார், பிடிவாதமாக இருக்கிறார்! அவரது ஆலோசகர், ஆச்சாரியார் அந்தாதிபாட, இன்னும் ஊர் சுற்றிய வண்ணமே யிருக்கிறார்!! சமீபத்தில், திருவாங்கூரைச் சேர்ந்த கல்வி நிபுணர் ஒருவர், சென்னை சர்க்காரின் கல்வித் திட்டம், சின்னபின்னப் படுத்தும் ஒரு திட்டம் எனச் செப்பினார்—சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தோழர் லட்சுமணசாமி, "கல்வித் துறையில் அரசியலார் புகுந்து குழப்புவதால் அனர்த்தங்கள் விளையும்" என்று பன்னிப் பன்னி உரைத்திருக்கிறார். "இந்தக் கல்வித் திட்டத்தை வாபஸ் பெற, மூன்று மத நோட்டீஸ் கொடுக்கிறேன்! இதற்குள் வாபஸ் பெறாவிடில், ஆச்சாரியாரே, பாரும்!!", என்று திராவிடர் கழகத் தலைவர் பெரியார், எச்சரிக்கை நோட்டீஸ், கொடுத்திருக்கிறார். இதற்கெல்லாம், உச்சக்கட்டமாக, இந்த அறிவுரை—எச்சரிக்கை — ஆகியவைகள் புறப்பட்ட அதே வாரத்தில், சென்னை மாநாட்டில் சிறந்ததோர் அறிவிப்பைச் செய்திருக்கின்றனர், பஞ்சாயத்துப் பிரதிநிதிகள்.

இத்தனையும் கண்ட பிறகு, கடந்த 2ம் தேதியன்று, ஆச்சாரியாரின் அரசாங்கத்திலிருந்து அறிவிப்பொன்று கிடைத்திருக்கிறது.

சென்னைக் கோட்டையிலுள்ள கல்வி அதிகாரிகள், புதுக் கல்வித் திட்டம் பற்றி, ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்களாம். என்ன ஆலோசனை? வரும், பள்ளிக்கூட ஆண்டில், எல்லோராலும் வெறுக்கப்படும் இந்தக் கல்வித் திட்டத்தைக் கை விடுவோம் என்பது பற்றியல்ல. மேலும் விஸ்தரிக்கப் போகிறார்களாம்! அது பற்றி ஆலோசனையாம்!! இதுவரை, கிராமங்களில் மட்டுமே அமுலில் இருந்து வந்த கல்வித் திட்டத்தை, வரும் ஜூன் மாத முதல், எல்லா நகரங்களிலும் கொண்டுவரப் போகிறார்களாம் — அதற்கு, என்னென்ன வழி முறைகளைச் செய்வது என்பன பற்றி, வழிகள் வகுக்கப்படுகிறதாம்! 'தேள், தீது'—என்று, கடியுண்டவன் படும் அவஸ்தையை எடுத்துக் கூறினால், 'இதோ பார்! உன்னையும் சிறிது கடிக்க விடுகிறேன்,' என்று சொல்வதுபோல, ஆச்சாரியார், நடவடிக்கை எடுக்கிறார். எவ்வளவு எதிர்ப்பு! எத்தகைய கண்டனம்! எங்கிருந்தெல்லாம் அறிவுரை! — இவையனைத்தும், துச்சமாகக் கருதப்படுகிறது, அன்பர் ஆச்சாரியாரால். ஓமந்தூரார் — காமராஜர் — சுப்பராயன் — இதுபோல, எண்ணிறந்தோர், 'வேண்டாம்! வேண்டாம்!,' என்று கூறுகின்றனர். 'விப்பிர பிம்பமாம் வேதவியாசர்,' அவர்களை அலட்சியக் கண்களோடு பார்த்தபடி, உத்திரவு போடுகிறார்! 'நீங்கள் யார், என்னைக் கேட்க? நீங்கள் வேண்டாம், என்று சொல்லுகிறீர்களா! நீங்கள் அப்படிச் சொன்னதற்காகவாவது, நான் அமுல் நடத்தத்தான், செய்வேன்,'' என்று ஆர்ப்பரிக்கிறார்.

இத்தகைய கொடுமதியும், கேவல நினைவும் படைத்த ஒருவரை, எங்கே காணமுடியும்? இவ்வளவு திமிரோடு —மன்னியுங்கள்! இதை விட வேறு வார்த்தையில்லை!!— உலவிய சர்வாதிகாரிகளைக் கூட சரிதத்தில் காண முடியாது. ஆனால், ஆச்சாரியார்—தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ஆச்சாரியார்—ஆர்ப்பரிக்கிறார்! அலட்சியமாக நினைக்கிறார்!!—தன் கல்வித்திட்டத்தை எங்கும் விஸ்தரிப்பதாக, விளக்கம் வேறு தருகிறார்!!! அதுவும், மக்கள் மன்றம், 'கூடாது, கூடாது' எனக் கண்டிக்கக் கண்டிக்க, அவரது திமிரும் பிடிவாதமும், அதிகமாகிறது. இந்த வேதனையான சூழ்நிலையிலிருந்து விடுபடுவது, எப்போது? அவரிடம் ஆகாத கல்வி முறையைக் கண்டிக்க, நாம் அறப்போர், தொடுத்தோம். அடித்தார்! மண்டைகளை உடைத்தார்! சிறைக் கதவுகளைத் திறந்து விட்டார்! அவருடைய பதில்படி 1800க்கு மேற்பட்ட வீரர்கள், இந்தக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, சிறை சென்றனர். அவ்விதம் சிறை சென்றோர் தொகை, மிகமிகக் கொஞ்சமாம்! இரண்டரை கோடி மக்கள் வாழும் நாட்டில், 1800 பேர், மிகமிகச் சாதாரணம்!! — எனப் பதில், தந்திருக்கிறார்.

அந்த 1800 உள்ளங்களிலிருந்தும், கிளம்பும் ஆவேசக்கனல், ஆச்சாரியாருக்கு—பாபம்!— தென்படாது அவர்களுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் மக்கள் சக்தியைப் புரிந்து கொண்டாலும், காட்டிக் கொள்ள மாட்டார். மண்டை மரத்து விட்டதென்பதல்ல— மனித சுபாவமே, பதவி யாசையால் மாறுவது, வழக்கமாமே! அதற்கு, ஆச்சாரியார் மட்டும், விதி விலக்கா? அதனால்தான், எவரையும் துச்சமென மதித்து, ஏறு நடைபோடுகிறார்! அவருக்கு அருமையான பதிலை, 'ராமச்சந்திரன் மூலம்' கிராமங்களின் பஞ்சாயத்துகள் அனுப்பியிருக்கின்றன. இது, நம்முடைய எதிர்ப்புக்கு, மக்கள் தரும் ஆதரவைக் காட்டுவதாகும். எனவே, வேகமான அளவில், ஆச்சாரியாருடைய மமதையை அழிக்க வேண்டிய கட்டம், நெருங்கிக் கொண்டிருக்கிறது இந்த நல் வாய்ப்பை, படுகுழியில் வீழ்த்தப் போகிறார்களா பெரிய கட்சி — நேருசொற்படி — தலைவர்கள்? இல்லை! வழக்கம் போல், நம்மீது குறை பாடித்திரியப் போகிறார்களா என்பதை, காலம் காட்டும். அந்தச் சந்தர்ப்பம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

★

எந்த வகையிலோ?

கல்யாணி காங்கிரசில் பேசிய—அல்ல! அல்ல!! சொன்மாரிபெய்த—பண்டித நேரு, மாகாண காங்கிரஸ் தலைவர்கள்—மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரின் கூட்டத்தைக் கூட்டி, அறிவுரை புகன்றாராம் "யுவர், யுவதிகளுக்கு ஏற்ற கவர்ச்சிகர வேலைத்திட்டங்களுடன், அவர்களை அணுகுங்கள். அப்போதுதான், அவர்களின் ஒத்துழைப்பை, நாம் பெறமுடியும். இல்லாவிடில், காங்கிரஸ் விரோதிகள் அவர்களைத் தங்கள் கட்சிக்கு இழுத்துக்கொள்வார்கள்" என்று வலியுறுத்திச் சொன்னாராம். 'எந்த வகையான கவர்ச்சி' என்று, விஷயம் விளங்காத ஒருவர், நம்மைக் கேட்கிறார். நமக்கென்ன தெரியும்?

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிட நாடு

காஞ்சி] 7—2—54 [ஞாயிறு

சிறு துளி, தாரீர்! பெரு வெள்ளம், காண்போம்!!

★

தடியடி பட்டோர்
குண்டடி பெற்றோர்
உறுப்பிழந்தோர்
உடல் நைந்தோர்.

இவர்களையெல்லாம், கடந்த பல மாதங்களாக, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, வேடிக்கை பார்த்த அரசாங்கம், தண்டனையும் வாங்கித்தந்திருக்கிறது. தண்டனையும் அற்ப சொற்பமானதல்ல; ஆண்டுக் கணக்கில். அவர்களிலே பலர், சின்னஞ்சிறு வாலிப மொக்குகள்! வீட்டுக் குழந்தைகள் தேம்ப, குடும்ப விளக்குகள் குமுறலோடு காட்சிதர, அத்தனையையும் பொருட்படுத்தாது அனைவரும் சிறைச்சாலைக்குள் சென்றுவிட்டனர்.

தோழர்களின் உள்ள உரமும், செயலார்வமும், தெரியாததல்ல, நமக்கு. தண்டனையேற்ற தோழர்களில் பலர்; கழகத்தின் கண்மணிகள். எதுவரினும் தயார்! என்று சூளுரைத்து பொதுவாழ்விலீடுபட்டமைக்காக, மக்களால் பஞ்சாயத்துபோர்டு தலைவராகவும், 'கவிஞர்' எனவும், 'செயல்வீரர்' என்னும் வாழ்த்தும் கவுரவமும் பெற்றவர்கள். அத்தகைய அருமையான இளம் சிங்களை, இழுத்துக்கொண்டுபோய், வழக்குப்போட்டு, சிறைக்கம்பிகளுக்கிடையில் பூட்டி இருக்கிறது, காங்கிரஸ் ஆட்சி.

நண்பர் கண்ணதாசன், காங்கிரஸ் கூடாரத்திலிருந்து தி.மு.க தோன்றிய நாளன்று வெளியேறி, நம்மோடு ஒன்றிய, உணர்ச்சியுள்ள வீரர். வெள்ளை உள்ளம் படைத்த, தமிழ்க் குயில். அவரையும் தோழர்கள் வடிவேலு, சண்முகம், தஸ்தகீர், துரைராஜ், ரெங்கராஜன், சூசை, முனிசாமி, நிமலன், சதாசிவம், ஐ எம். ஷரீப், கலைமகள் பிரஸ் உரிமையாளர் ராதாகிருஷ்ணன், ராமதாஸ், பங்காருசாமி, கோபால கிருஷ்ணன், டி வி. பிச்சை முதலிய 16 தோழர்களையும், இரண்டரை ஆண்டு தண்டனைக்கு, சட்டத்தின் மூலம், ஆளாக்கியிருக்கிறது. இ பி. கோ. 147, 332 ரயில்வே சட்டம் 128 எனும் பிரிவுகள், இதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் தோழர்கள் அனைவரும், மக்கள் மன்றத்தின் நற்றொண்டர்கள்! தீ விபத்து — வெள்ளச் சேதம் — இதுபோன்ற பல இயற்கைக் கேடுகள், திருச்சியைச் சூழ்ந்தபோது, கழகச் சார்பில் நின்று உதவி புரிந்த உத்தமர்களும், இப் பட்டியலில் இருக்கிறார்கள். தோழர் ஐ. எம். ஷரீப் என்பார் திருச்சி மாவட்ட மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகயிருந்து, பணியாற்றியவர்—திருச்சி பீடித் தொழிலாளர்களின் தலைவர். இவர்களையெல்லாம் குற்றவாளிகளாக்கி, தண்டனை பெறச் செய்திருக்கின்றனர். இவர்கள், சமூக விரோதமான காரியங்களைச் செய்தார்களாம் — இவர்களால், கேடு விளைந்ததாம். திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தர்மலிங்கம், அம்பில் பஞ்சாயத்து போர்டு தலைவர். அவரையும், கல்லக்குடி அறப்போராட்ட கண்காணிப்பு வீரர் தம்புசாமி, கருமலை; துப்பாக்கிக் குண்டடிக்கு ஆளான சந்தானம் ஜோசப், ரேத்தினம் ஆகிய ஐவர் மீதும், இ. பி. கோ. 332, 334 பிரிவுகள்படி, ஓராண்டு தண்டனை வாங்கித் தரப்பட்டிருக்கிறது.

இந்தத் தண்டனைகளை அளித்தவர், திருச்சி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கே. பி. ராதா கிருஷ்ண மேனன், என்பார்.

இந்த 22 தோழர்களும், கல்லக்குடியில் நடைபெற்ற அறப்போரின் விளைவுகளுக்குக் காரணமாயிருந்தார்களாம்—இதுவே, அவர்கள் மீது வீசப்பட்ட குற்றச்சாட்டு.

ஆட்சியாளரின் மோணல் மதியை நிமிர்ப்பதற்காகத் தோழர்கள் அறப்போர்க்களம் புகுந்ததையாரும் மறுக்கவில்லை. அதேபோல், அந்தப் பணியிலீடுபட்டமைக்காக, இவர்களையெல்லாம் அரசாங்கம் படுத்திய பாட்டையும், நாடு மறக்காது.

'கல்லக்குடி' எனும் பெயரை வைக்கவேண்டும் என்று கோரியமைக்காக, அங்கு துப்பாக்கியால் சுட்டனர்! தடியால் தாக்கினர்! தளிர்ச்சோலைபோன்ற இரண்டு வாலிபர்களைப் பிணமாக்கினர். தோழர் மு. கருணாநிதிக்கும் இன்னும் நால்வருக்கும். ஆறுமாதத் தண்டனை அளித்தனர். அவரைப் பின்தொடர்ந்த காரைக்குடி சுப்பையாவுக்கும் இன்னும் பல தோழர்களுக்கும் மூன்று மாத சிறைத் தண்டனை தந்தனர். இப்போது, இவர்களுக்கு, ஒன்றரை வருடமும், ஒருவருடமும், வழங்கியிருக்கின்றனர்!

சட்டத்தின் நாக்குகள், இவ்வளவு எளிதில் வளையக்கூடியதென்று எவரும் கூறார். ஆனால், இதோ கண்முன்னால் காண்கிறோம் — விதவிதமான, தண்டனைகள்! ஒரே குற்றச்சாட்டு!!

இந்தத் தீர்ப்பின்மீது விமரிசனம் செய்ய, நாம் விரும்பவில்லை. ஆதிபத்ய ஆட்சியில் வழங்கப்படும் தீர்ப்புகளின் கதைகளை உலகம் நன்றாக அறியும். ஆனால் தர்பார் நடாத்திவிட்டு தன்னுடைய கொடுமைகளுக்கு ஆளாகிய அதே மக்களைப்பிடித்திழுத்து, வழக்குத் தொடர்ந்து, சிறைக்குள்ளும்பூட்ட ஒரு அரசு முயலுகிறதென்றால்,

அந்த அரசினைப்பற்றி, என்னவென்றுரைப்பது?

நண்பர் கருணாநிதியுடன், குமரவேல் என்றொரு இளைஞரை ஆறுமாதம் பூட்டினர். சிறையிலிருந்து வெளிவந்ததுமுதல், அத்தோழர், படுக்கையில் கிடக்கிறார்.

இங்ஙனம், வாழப் பிறந்த மக்கள் உரிமைக்குரல் எழுப்பினர் என்பதற்காக, சிறைக்கதவுகளைத் திறந்தும், துப்பாக்கிக் குண்டுகளை வீசியும், துரைத்தனம் நடத்துகிறது ஒரு ஆட்சி — அதுவும், அகிம்சையின் பெயரைச் சொல்லும் ஒரு ஆட்சி—என்றால், நாம் வாழ்வது நாடா அல்லது காடா?

*

தோழர்கள் அனைவரும், மாஜிஸ்டிரேட் அளித்த தீர்ப்பைக் கேட்டதும், முகமலர்ந்து வரவேற்றனராம் —நன்றி தெரிவித்தபடியே, லாரியில் ஏறினராம். செய்தியைக் கேள்வியுற்றபோது, சிந்தையில் ஒரு விநாடி, தேன்மாரி பொழிந்தது போலிருந்தது. ஒரு அரசாங்கம், சிறைத் தண்டனை வாங்கித் தருகிறது—அதைப் பெறும் வீரர்கள், சிரித்த வண்ணமே அதனை வரவேற்கின்றனர் என்றால், அது சாமான்யமானதா! பொது வாழ்க்கையில், இத்தகைய வீரர்களோடு சேர்ந்து வாழும் பேறு பெற்றோமே என்று, உள்ளம் பூரிக்கத்தானே செய்யும்? திராவிட முன்னேற்றக் கழகம், தென்றலிலே, பிறந்ததல்ல! தீயிலே முளைத்தது!! அதனால், எதையும் தாங்க முடியும். அதன் தொண்டர்கள், எத்தனை துயரங்கள் மோதினாலும், அயராத உள்ளம் படைத்த ஆர்வக் காளைகள்—எனும் பெயர், சரித ஏட்டில், ஏறுவதை எண்ணும்போது எவர் மனம்தான், பூரிக்காது?

அந்த வகையில் நம்மருங் கண்மணிகளை, சிறைக்கூடம் அழைக்கிறது எனும் செய்தியினைக் கேள்வியுறும்போதெல்லாம், நமது விடுதலை நாள் நெருங்கி வருகிறது எனும் களிப்பால் நம்மையறியாமலேயே உள்ளம் குதூகலம் அடைவதுண்டு.

இப்படி சிறைக்கூடங்கள் நிரம்ப நிரம்ப, தாயகத்தின் விலங்கு பொடிப் பொடியாகிறது என்பது தானே, இந்திய உபகண்டத்தின், கடந்த கால வரலாறு. இதனை எண்ணிப் பூரிப்பதுண்டு, நாம். அது போலவே, தண்டனைச் செய்தி கேட்ட நமது வீரர்கள் சிரம் குனிந்து சிரித்தவண்ணம் ஏற்றனர் எனும் செய்தியைக் கேள்வியுற்றதும், உள்ளம்தெம்மாங்குபாடிற்று. ஆனால், அடுத்த விநாடியே திகைப்பு பரவிற்று! ஏனெனில் கண்ணதாசனுக்கும் தர்மலிங்கத்துக்கும் தோழர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் தண்டனை, சாதாரணமானதல்ல ஒன்றரையாண்டு! ஓராண்டு!! அவர்களின் கள்ளங்கபடமற்ற முகங்களை ஒரு முறை நினைத்துக் கொண்டு, இத்தண்டனைக் காலத்தையும் நினைத்தால், எவருடைய உள்ளமும் எரிமலையாகத்தான் செய்யும். அதிலும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது, வெறுங்காவல் அல்ல; கடுங்காவல்.

இவ்வளவு கொடூரமான தண்டனையைப் பெற, குற்றம் என்ன செய்தனர்? மலபார் போலீசின் கையிலிருந்த துப்பாக்கிகளைப் பிடுங்கி, டால்மியாவின்மீது, திருப்பினரா! போலீசாரின் கையிலிருந்த தடிகளைப்பறித்து, தண்டவாளங்களைப் பெயர்த்தனரா? வானத்தையளாவும் புகைப்போக்கிகளோடுநிற்கும் சிமெண்டு ஆலையை, உடைத்தெறிய கங்கணம் கட்டினரா? இல்லை இல்லை. இவைபோன்ற செயல்களை மனதிலும் நினையாத மாணிக்கங்கள் அவர்கள். ஆனாலும், கிடைத்திருக்கிறது, ஒன்றரை ஆண்டு! ஓராண்டு!! அதிலும், சாதாரணமாகவா? தண்டனையேற்ற தோழர்கள் பலரின் உடலில், சர்க்காரின் குண்டுகள் விளைத்த தழும்பு, காட்சி தருகிறது — கன்றிப்போன உடலில் இன்னும் தெம்பு ஏற்படவில்லை — அதோடுகூட, இந்தக் கொடூர சிறைவாசமும் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த விபரீதத்தை எண்ணும்போது, விண்ணும் காரித்துப்பும், வாயிருந்தால்! பூமியும், கசிந்து சிந்தும், கண்ணிருந்தால்! கேவலம், புழு பூச்சிகளும், எள்ளி நகையாடும் பேச முடிந்தால்! அவ்வளவு விசித்திரம் நிரம்பிய ஒரு ஆட்சிக்கோலின் கீழ், நாம், அடங்கிக் கிடக்கிறோம், இன்று. என்ன, கொடுமை! எவ்வளவு பரிதாபம்!!

*

கல்லக்குடி வழக்கின் முடிவுகளை எண்ணும்போது, தூத்துக்குடியில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுக் கிடக்கும் நம்மரும் சகோதரர்களின், நினைவு, நம்மைக் கலங்கச்செய்கிறது. பல மாதங்கள் ஓடிவிட்டன, அவர்களைப்பார்த்துப் பேசி! கூண்டுக்குள் அடைபட்டு, உற்றாரையும் பெற்றோரையும் காண முடியாதவர்களாய், தினசரி நீதிமன்றத்துக்கு வருவதும்—திரும்பிக் கூண்டுக்குள் செல்வதுமாக, சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் மீது வீசப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகள், அனந்தம்! அதற்கென இழுத்து வரப்படும் சாட்சிகள், நூற்றுக்கணக்கு! வழக்கு நடைபெறுவதோ, விசேஷ நீதி ஸ்தலத்தில்! இவ்வளவு கெடுபிடிகளுடன், அவ்வழக்கையும், அதைக் குறித்து ஆச்சாரியார் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தையையும் உற்றுநோக்கும்போது, உண்மையில், வேதனைப் படவேண்டியவர்களாகவே யுள்ளோம்.

இந்தச் சதி வழக்கினை, வாபஸ் வாங்க வேண்டுமெனக் கோரி, நாடெங்குமுள்ள முற்போக்குக் கழகங்கள், தீர்மானங்கள் செய்தன! மனமில்லை, நம்மை யாளும், மகானுபாவருக்கு. விசித்திர விளக்கங்கள் வழங்கியபடி. வேதனை தரும் விளைவை வழங்க, விடா முயற்சியோடிருக்கிறார்.

மாஜிஸ்திரேட் விசாரணையிலிருந்து மீள்வதற்குள்ளாகவே, சுமார் ரூ. 10,000 செலவாகும் போலிருக்கிறது. வழக்கு, மற்றக் கட்டங்களைத் தாண்டுவதற்குள்,

---

“தானிக்குப் பேரு, ஏமி?

“பிறருக்குப் பிரசங்கம் செய்வதே, காங்கிரசார் தொழிலாகிவிட்டது. தாங்கள் என்ன செய்வதென்று அவர்கள் முதலில் நிச்சயித்துக் கொள்ளவேண்டும்”—கல்யாணியில் பண்டித நேரு தந்த உபதேசங்களில், இதுவும் ஒன்றாம்!

எவ்வளவு பணம் தேவைப்படுமோ! இன்னும் என்னென்ன முயற்சிகளை, நாம் செய்ய வேண்டுமோ!!— எண்ணினால், பெருமூச்சும், 'மக்களிருக்கும்போது கவலையேன்?,' என்கிற மனத் துணிவும், வருகிறது. அந்தத் துணிவோடு காரியங்களைச் செய்ய நினைத்தால், ஐகோர்ட் முன்னுள்ள ஐவர் வழக்கு, கவனத்துக்கு வருகிறது.

அப்பப்பா! "திராவிட முன்னேற்றக் கழகமே —நீ, இத்தீயவர்களின் கையிலகப்பட்டு, இன்னும் என்னென்ன சங்கடங்களைத் தாங்க வேண்டுமோ?" என்று உள்ளம் குமுறுகிறது.

இத்தகைய நெருக்கடியான நேரத்தில், கல்லக்குடி வழக்கு, இவ்வண்ணம் முடிவு பெற்றிருக்கிறது. தீர்ப்பையும் தண்டனையையும் கேள்விப்படும்பொழுது, இந்த வழக்குகளை, இப்படியேவா விட்டுவிடுவது? நம்மருந்தோழர்களின் நிரபராதித்தன்மையை—நாடு அறியும்—சட்டம் அறியும்படி செய்ய வேண்டுமே! என்கிற பெருமூச்சு, எழும்பத்தான் செய்கிறது. ஒன்றை ஆண்டு! ஓராண்டு! இத்தோழர்களைப் பிரிந்து நாமிருக்கவேண்டும். எண்ணும்போதே, இதயத்தைத் துளைக்கிறது அவர்கள் கொஞ்சு மொழி பேசும் தமிழ்நாட்டுக் கிள்ளைகள்! நஞ்சுமனம்படைத்த வல்லூறுகளின் கெடுமதிக்கு இரையாவதா? வாழ்நாளில் ஓராண்டு காலத்தை, வீணே வெஞ்சிறைக்குத் தத்தம் செய்வதா? வசந்தம், வருடத்தில் ஓர் முறைதான், வரும் — அது போல, வாலிபமும், வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும். அந்த வாலிபப் பருவத்தில் ஓராண்டை, கெடுமதியாளரின் போக்கால், நம்மருங் கண்மணிகள் இழப்பதா? கூடாது! கூடாது!! அவர்களை, நாடு எதிர்பார்க்கிறது—நாமும் எதிர்பார்க்கிறோம்.

எனவே, அவர்கள்மீது சாட்டப்பட்ட குற்றங்களிலிருந்து அவர்களையெல்லாம் விடுவிக்கவேண்டும்— அதன்மூலம் ஆச்சாரியார் ஆட்சியின் அலங்கோலத்தை உலகுக்குணர்த்தவேண்டும். கல்லக்குடி வழக்கில் கடுந்தண்டனைகளைப் பெற்ற காளைகள் அனைவரையும் வெளியில் கொணர்ந்து, அவர்கள் சார்பில் வழக்கினை நடத்த, தி.மு.க. தயங்காது — இந்த முடிவுடனேயே பொதுச் செயலாளர், திருச்சி சென்று, வழக்கறிஞர்களைக் கலந்துவிட்டு வந்திருக்கிறார்.

இதனால், தூத்துக்குடி வழக்கினை மட்டுமின்றி, கல்லக்குடி வழக்கினையும் நாம் நடத்தியாக வேண்டும். இரு வழக்குகள்! இரண்டும் முக்கியமான வழக்குகள்!! இவைகளை நடத்த, தி. மு. க. ஒரு பணக்கோட்டையல்ல— பணதிபதிகளிடம் பல்லைக் காட்டும் சேட்டை கொண்டதுமல்ல. எனவே, இதற்கான நிதியினைத் திரட்டியாக வேண்டும்.

கடந்த பல மாதங்களில், மக்கள் மன்றத்தில், தி. மு. க பெற்று வரும் வெற்றிகள், ஏராளம். தி. மு. கவை, எள்ளி நகையாடியோரும் — 'அதன் நிழலைக் கண்டாலே, ஓடி வந்துவிடு!,' என்று கொள்கை பேசினோரும், நச்சுக் கண்களோடு பார்த்தோரும், நம்முடைய கண்ணியத்தையும் கடமைப் பொறுப்பையும் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலை, வெகுவேகமாக வளர்ந்து வருகிறது — மாற்றுக் கட்சிகளில். இதனால், மக்கள் மன்றத்தில், நம்மைப் பற்றிய நம்பிக்கை நட்சத்திரம், உதயமாகியிருக்கிறது! இந்த உதயத்தை உணர்த்துவதுபோல, இதுவரை தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக சுமார் ரூ 13,000 சேர்ந்திருக்கிறது இத்தொகை, சாமான்யமானதல்ல. இதில் கலந்திருக்கும் அணாக்களும், ரூபாய்களும், வியர்வையைச் சிந்திப் பாடுபடும் உழைப்பாளர்கள் தந்த செல்வமாகும். இந்த அழியாச் செல்வம், அதிகமாக வேண்டும். அப்போதுதான், ஆணவக்காரர்களின் அடக்குமுறைக்குப் பதில் தர இயலும்.

சந்தர்ப்பங்கள், எப்போதுமே, வாய்ப்பதில்லை! சிலவேளைகளில் சந்தர்ப்பம், சந்தனமணத்தையும் தரும்—நாற்றச் சேற்றையும் அள்ளிவீசும். இப்போது, இந்நாட்டு வாழ்வில் அக்கறைகொண்டோருக்கு, அருமையான சந்தர்ப்பம், வாய்த்திருக்கிறது. ஒவ்வொருவரும் நாட்டின்பால் — விடுதலை வீரர்கள்பால் — தத்தமது ஆர்வத்தைக் காட்டிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம். இந்தச்சமயத்தில், இயன்றளவு உதவியால், தத்தமது உணர்ச்சிப் பெருக்கினைக் காட்டிட வேண்டுமென அழைக்கின்றோம்!

காசு சம்பாதிப்பது, பெரிதல்ல; ஆனால், அதனை, எப்படிச் செலவிட்டோம் என்பதுதான்,

'அவருக்கு' அர்ப்பணம்!

1. முதன் மந்திரியாக அல்லது மந்திரிகளாக வருபவர்கள், 'தாமிருக்கும் ராஜ்யமே உலகம்' என்று கருதும் பிரகிருதிகளாக இல்லாமல், இந்தியாவிற்கு வெளியே சுற்றுப் பிரயாணம் செய்து, விசால மனோபாவம் பெற்றவர்களாயிருக்கவேண்டும்.

2. குறைந்த பட்சம், ஒருவிதமான உல்லாசமான வேலையில் தேர்ந்தவராயிருக்க வேண்டும். சிரிப்புக் குணமின்றிப் பேசுவதோ, மதுவிலக்கைப் பற்றி அளப்பதோ, உல்லாசக்கலையாக இருக்கக் கூடாது.

3. மந்திரிகளாக நியமிக்கப்பட்ட பிறகு, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாயிருக்க வேண்டும்.

*

இவ்வண்ணம் யோக்யதாம்சங்கள் வரையறுக்கப்பட வேண்டுமென ஷராப் என்பார், தெரிவித்திருக்கிறார்! இந்திய சர்க்காரால் மேதையென்று கருதப்பட்டு, ஆலோசனை கூறும்படி, அழைக்கப்பட்டிருப்பவர், அவர், இவ்வண்ணம், தெரிவித்திருக்கிறார். பத்திரிக்கையில், சென்னைக்கு வந்ததும், ஒரு மந்திரியாரின் சொற்பொழிவைப் பார்த்தாராம். அதைப் பார்த்த பிறகு, தாம் இந்த முடிவுக்கு, வந்ததாகச் சொன்னார். அவர், யாரை, மனதில் வைத்துக்கொண்டு இவ்வண்ணம் சொல்லியிருக்க முடியும்? சிந்தியுங்கள் விளங்கும்!!

பெரிது. ஒவ்வொருவரும் எவ்வளவோ உழைத்து, எப்படியெப்படியோ, இழக்கிறார்கள்! உருண்டோடிடும், அந்தக் காசில், ஒரு சிறு தொகையை, இந்த வழக்கு நிதிக்கு, வழங்க வேண்டுமெனக் கோருகிறோம். இந்தச் செயல், நிரபராதிகளை விடுவிக்கும் ஒரு நற்காரியமாகும். இதனை, நிறைவேற்றுவீர்! நிதி நல்குவீர்!!—என்று பெருமூச்சும் குமுறலும் கொந்தளிக்கும் இந்த நேரத்தில், எல்லோரையும் வேண்டிக்கொள்கிறோம்.

நமது கண்மணிகள் வாடுகிறார்கள்! அவர்கள், நாட்டின் செல்வர்கள்! அவர்களை, ஆதிக்ககாரர்களிடமிருந்து மீட்க வேண்டும்! அதற்கானவை செய்வதே, நமது இன்றைய பணி! இதனை, எல்லோரும் எண்ணுங்கள் — இயன்றளவு உதவுங்கள். நாம் சேர்க்கும் ஒவ்வொரு காசும், நமது தோழர்களைப் பூட்டியுள்ள சிறைக்கம்பிகளை உடைக்கும் சம்மட்டிகள்!—இதனை மட்டும், மறவாதீர் — இது, ஒரு பெரிய கடமை என்பதையும், மறவாதீர்—என, இந் நாட்டு ஏழையுள்ளங்களை, சிறைக்குள்ளே வாடும் நம் செல்வங்களைப்பற்றிய சிந்தனை தாக்குகின்ற இந்த நேரத்தில், வேண்டுகிறோம்

✶

புரியவில்லை, நமக்கு!

"நிறைவேற்றப்படும் மசோதாக்களின் தொகையைக் கொண்டோ, கூட்டம் நடக்கும் நாட்களின் எண்ணிக்கையைக்கொண்டோ, பார்லிமெண்டரி சர்க்காரின் வெற்றி முக்கியமாக எடைபோடப்படுவதில்லை. வேலையின் தரம், மெம்பர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையேகாணும் உறவின் தன்மை ஆகிய இரண்டும் தான் பிரதானம். பார்லிமெண்டுமெம்பரானாலும் சரி, அசெம்பளி அங்கத்தினரானாலும் சரி, — அவர்தம் சொந்தத் தொகுதியில் நம் ஜனநாயகத்தின் சின்னமாக விளங்குகிறார். மக்களின் நலன்களுக்கும், வாக்குரிமைக்கும், காப்பாளனாக அவர் விளங்கவேண்டும்......சட்டசபை அங்கத்தினர்கள் அவரவர் தொகுதிகளில் பணியாற்றுவதை பொறுத்திருக்கிறது, ஜனநாயக, பார்லிமெண்டரி முறைகளின் மீதுள்ள மக்கள் நம்பிக்கை"

*

ஜனநாயகத்தின் அருமை குறித்து, கல்யாணியில் கர்ஜித்தாராம், பண்டிதநேரு! அவர் கூறியிருக்கும் இந்த அறவுரைகளனைத்தையும் மனமார வரவேற்கிறோம். அவர் கூறும் 'மக்கள் தொடர்பு' வளர வேண்டுமென்பதற்காகவே, ஆச்சாரியாரின் புதியகல்வித்திட்டம் பற்றி ஊர்வலமாகச் சென்று நம் உதவி பெற்ற எம். எல். ஏக்களை சந்தித்தோம்— அவர்களும் நமது கோரிக்கையின் தூதர்களாக, சட்டசபையில் விளங்கினார்கள்! அதற்கு ஆச்சாரியார் காட்டிய பதில்என்ன? அராம் ரவம்! விசித்திர விளக்கம்!! இத்தகைய ஆசாமிகளை அதிகார பீடத்தில் வைத்துக்கொண்டிருக்கும் பண்டிதர், ஜனநாயக உபதேசம் செய்வது, யாருக்காக? புரியவில்லை, நமக்கு!

★

பம்பாய் தி. மு. க.

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டுச் செயற்குழுக் கூட்டம் 21-1-54 வியாழன் இரவு 8 மணிக்கு தாராவி, கழக அலுவலகத்தில் வரவேற்புகுழுத் தலைவர் தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றபோது மாநாட்டுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் பேசிய பிறகு, 'பம்பாய் தி. மு. க. முதல் மாநாட்டை 1954 மார்ச் திங்கள் இறுதியில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது''

மாநாட்டில் கலந்து கொள்ள அண்ணா, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், மனோகரன், இசைமுரசு அனிபா ஆகியோர் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இறுதியாக மாநாட்டுச் செயலாளர் தோழர் சி. த. மு. இர. ஆரிய சங்காரன் நன்றி நவிலக் கூட்டம் இனிது கலைவுற்றது. தோழர். இரா. மா. சண்முகராசன் திராவிடப்பண் பாடினார்.

ஒரு கடிதம்!

உங்களுக்கல்ல; மைசூர் சர்க்காருக்கு!

தீட்டியவர் எம். எஸ். எஸ். சர்மா; என்பவர்.

கடிதம் எப்படி கைக்கு வந்தது, என்பீர்கள்? தீட்டியவர், கடிதத்தை, தபால் பெட்டியில் போடவில்லை! 'சுதேசமித்திரன் ஆபீசுக்கு அனுப்பியிருக்கிறார் !!

'இந்து கலாசாரத்துக்கு ஆபத்து!,' என்ற தலைப்பிட்டு, அந்த ஏட்டின் ஆசிரியர், 21-1-54 இதழில் பிரசுரித்துள்ளார்.

கடிதம் — பல உண்மைகளை, விளக்கும். படியுங்கள். பின்பு, பதில் கூறுங்கள்!

*

சிருங்கேரி மட ஜாகீர் ஒழிப்பு மசோதாவை, அவசரடியாக நிறைவேற்ற மைசூர் சர்க்கார் தீர்மானித்திருப்பதாகச் சொல்லப்படுவது, அவர்களுடைய மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்துவதாகாது... இந்தச் சொத்து, உண்மையில் மைசூர் மக்களால் கொடுக்கப்பட்டதென்று, சொல்வதற்கில்லை........ எப்படியாயினும் இந்த சிருங்கேரி ஜாகீரை தனிப்பட்டவருக்குச் சொந்தமான ஜமீந்தாரிகள்போல் பாவித்துவிடக் கூடாது.........தற்போதுள்ள (அரசியல்) அமைப்பில், சிருங்கேரி மைசூரின் பாகமாயிருப்பது அகஸ்மாத்தானதேயாகும்...

பாகிஸ்தான், அமெரிக்கா ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்த நிலையில், இந்தியாவில் முழு ஒற்றுமை இன்றியமையாததாயிருக்கும் இத்தருணத்தில், மைசூர் சர்க்கார் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கும் இந்த

வடிக்கை புத்திசாலித்தனமான தன்று. இடையூறையும் விளைவிக்கக் கூடியது.

சில நாட்களுக்குமுன் அலாகாபாதில் 20-ஆயிரம் பேருக்கு மேற்பட்ட சாதுக்களின் கூட்டமொன்று கங்கைக்கரையில் கூடி இதுவிஷயம் பற்றி தீவிரமாக விவாதித்தார்கள். மைசூர் சர்க்காரின் இச்செய்கை, இதற்கு முன் கண்டறியாததென்றும், யாருடைய நன்மைக்காக மடம் ஸ்தாபிக்கப்பட்டு மகோன்னதமான சேவையை செய்துவருகிறதோ, அத்தகைய ஹிந்துக்களின் கலாச்சாரத்தின்—நாகரிகத்தின்—கடைசிச் சின்னத்தையும், இது அழித்துவிடுமென்றும் அவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படையாகச் சொன்னார்கள்.

மைசூர் அரசாங்கத்தின் இந்த மசோதாவுக்கான விநோத காரணங்கள்பற்றி பிரதமமந்திரி நேருவுக்கு, எதுவுமே தெரியாதென்றாலும், அவரையே இதற்குப் பொறுப்பாளியென்று இந்து மக்கள் கருதுகின்றனர்.

சமீபத்தில் நடந்த சங்கதிகள் மைசூர் மந்திரிகளுக்கு தெரியாதென்று எண்ணுகிறேன்............ காலஞ்சென்ற நவாப் ஸாதா லியாகத் அலிகானின் அடாவடி (மூடிய முஷ்டி)க் கொள்கையின் விளைவாக இந்தியாவில் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அந்த சமயத்தில் சில நண்பர்கள், சிருங்கேரிஸ்வாமிகளைப்போய் சந்தித்தனர். அவர், பிரதம மந்திரிக்கு தமது ஆசிகளை அனுப்பி அவரது சமாதானமுயற்சிகள் வெற்றி பெறுமென அருள்வாக்குக் கூறினார். ஸ்வாமிகளின் ஆசிர்வாதங்கள் நேருவுக்குக் கிடைத்த இரண்டுமணி நேரத்திற்குள்ளாக, பலரும் ஆச்சரியப்படும்படியாக, லியாகத் அலிகான் திடீரென்று தமது கொள்கையை மாற்றிக்கொண்டார்.

எனவே, மைசூர் மந்திரிகள், ஜாகீரை சர்க்காரில் எடுத்துக் கொள்ள வேண்டாம் எனக்கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நடவடிக்கையால், அகில இந்தியாவிலும் இந்துமக்களிடையே காங்கிரசுக்குள்ள நன்மதிப்பும் செல்வாக்கும் நிச்சயம் குறைந்துவிடும்.

சுப்ரீம் கோர்ட்டில்இதேபோன்ற பிரச்னைகளைக்கொண்ட சில அப்பீல்களிருக்கின்றன. ஜீவாதாரப் பிரச்னைகளான இந்த அப்பீல்களின் முடிவுவரை நிறுத்தி வைப்பதே அறிவுக்குகந்த காரியம். முழுதும், சட்டரீதியாகப் பார்த்தாலும், அப்படி ஒத்திவைப்பதுதான், அறிவுடைமை.

*　　*　　*

எவ்வளவு வினயம்! மீண்டுமோர் முறை, கடிதத்தைப் படியுங்கள். அப்போது தெரியும், 'ஆரியமத உபாக்யானம்' எவ்வளவு, வளவு நெளிவு மிக்கதென்பது!!

சிருங்கேரி ஜாகீரை ஒழிக்க மைசூர் சர்க்கார், நடவடிக்கையெடுக்க உத்தேசித்திருக்கிறது. அதற்கு, இப்படியொரு கடிதத்தைத் தீட்டி, 'அறிவு' புகட்டுகிறார், அன்பர் சர்மா!

புத்தி தீக்ஷணியர்தான், ஆரிய மதம் வேரூன்றக் காரணமென்பார்கள். அது, மிளிரும் அழகையும், 'மித்திரன்' அதற்குக் காட்டும் ஆதரவையும், கடிதம் விளக்கும்.

எத்தனையெத்தனை, ஆதாரங்கள்,—அறிவுரைகள்—மிரட்டல்கள்—போதனைகள்—அடடா! 'ஏக போக மிராசு, போகிறதென்றதும் என்னென்ன ஏற்படுகிறது, ஆண்டவனின் சிஷ்யர்களுக்கு!!

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

காரணம்?

கடந்த தினங்களில் இரு நாட்கள், மிகவும் அமைதியாகக் கழிந்து போயிருக்கின்றன.

ஒன்று, இந்தியக் குடியரசு நாள்; மற்றொன்று, காந்தியார் நினைவு நாள்.

இந்த இரண்டு நாட்களும், இவ்வளவு அமைதியாகக் கழிந்ததில்லை! ஆனால், கழிந்திருக்கிறது!! என்ன காரணம்?

குடியரசு நாளைப்பற்றி எடுத்துச் சொன்னால், ஏமாந்த ஏழை, 'போய்யா! வேறு வேலையில்லையோ?' என்று குமுறுவான். காந்தியடிகளைப் பற்றிப் பேசினால், அவரது கொள்கைகளை எடுத்துச் சொல்லும் போது, 'அவர் கூறியபடி, நீங்கள் நடக்கிறீர்களா?,' என்று மக்கள், கேட்பர். இந்த அச்சத்தாலா, வேறு எதனால், என்று விளங்கவில்லை—விமரிசையும், கோலாகலமும் காட்சியளிக்காததற்குக் காரணம்?

★

'கல்யாணியில்' நேரு!

குதித்தார்
கோபமுற்றார்
எச்சரித்தார்
தாண்டினார்
தாவிச் சென்றார்.

*

"ஜனங்களே! நான் மேடையிலிருந்து இறங்கி அந்த மூலைக்கு நடந்து வரப்போகிறேன். எல்லோரும் எனக்கு வழிவிட்டு பாதை அமைத்துத் தரவேண்டும் நான் வரும்போது, ஒருவரும் என் கால்களைத் தொட்டு நமஸ்கரிக்கக் கூடாது" என்றார்.

*

பத்திரிகாசிரியர்களுக்கு எழுத வெளிச்சம் இல்லையே! என்று இங்கு மங்கும் ஓடினார்

*

ஜனக்கூட்டத்தின் அமளியைக் கண்டு, 'அடங்கப்போகிறீர்களா? இல்லையா!' என்று கூச்சலிட்டார்.

*

இத்தனைக்கும் மேலாக, பிரசங்கமும் செய்தார்!

"அந்நாள், வரவேண்டும்!"

நீண்ட நாட்களாகிவிட்டன நீங்களும் நானும் அவரைச் சந்தித்து! சட்டசபையில், 'நித்யகண்டம் பூரணாயுசை' அனுபவித்ததால், அவரின் நீண்ட உபதேசங்களைக் கேட்கும் வாய்ப்பில்லாமற் போயிற்று!! இப்போது அந்த 'நெருக்கடி' இல்லாததால், வழக்கம்போல் உற்சாகமாகக் கிளம்பியிருக்கிறார், திருச்செங்கோட்டுவாசி. செல்லுமிடந்தோறும் உபதேசங்களைச் செப்பத் துவங்கியிருக்கிறார். சின்னாட்களுக்குமுன், சென்னையில் நடைபெற்ற, பொதுக்கூட்டமொன்றில், புளித்துப்போன செய்தியொன்றை உங்களுக்கும் நமக்கும் உரைத்திருக்கிறார். இந்தச் செய்தியை, சுயராஜ்ய மணம் வீசத்துவங்கிய நாள் முதல், ஆசிரியர் சாதி முதல் சாதாரண சீடர்வரை, முழக்கக் கேட்டிருக்கிறோம். எனினும், அதனையே மீண்டும், ஆச்சாரியார் அசை போட்டிருப்பதால், அவரைச் சில இடங்களுக்கு அழைத்தேக விரும்புகிறோம். நாடு நலிவதற்குக்காரணம் மக்களிடையில் உழைப்பு இல்லையாம்! அது ஒன்றுமட்டும் இருந்துவிட்டால், உலகமே கண்டு நடுங்குமளவுக்கு இந்த உபகண்டத்தைச் செய்துவிடுவாராம்!! அந்தஉழைப்பு இல்லாத காரணத்தாலேயே, வறுமையும் பிணியும், நாசமும் நலிவும் நம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கின்றனவாம். உழைப்பின் மகிமையை, மிக மிக வலியுறுத்திப் பேசியிருக்கிறார், அவர். ஆகவே, அவரைச்சிலஇடங்களுக்கு, அழைத்துச் செல்லலாம்—அந்த இடங்கள் உங்களுக்கும் நமக்கும் அறிமுகமானவைதான். எனினும் அவருக்காக, உங்களையும் அழைத்துச் செல்ல, நேரிடுகிறது.

* * *

சின்னான் குடிசை

நைந்துபோனகுடிசை! நீருக்கு மத்தியில் நிற்கும் படகுபோல,வயற்காடுகளுக்கு மத்தியில், தேளும் பாம்பும் தோட்டத்து வேலியாக அமைந்து கிடக்கும் சேரியிலிருக்கிறது. கதிரோன் கிளம்பு முன் எழும்பி, மாலைச் சூரியன் மறைந்த பின் திரும்பும் மணாளனை எதிர் பார்த்தபடி, நிற்கிறாள், செல்வி—சின்னான் மனைவி. அவளும், நாள் முழுதும் நாற்று நட்டவள்தான். அந்தக் களைப்பு, உடல் முழுமையும் ஒருபுறம் தாக்கினாலும் சோறாக்கி வைத்தபடி 'இன்னும் வரவில்லையே!' என்று ஏங்கியபடி உட்கார்ந்திருக்கிறாள். அதோ! தள்ளாடித் தள்ளாடி வருகிறான், சின்னான். மதுவிலக்குக் காலம்; ஆகவே, குடிபோதையல்ல, அவன் தள்ளாட்டத்துக்குக் காரணம். நாள் முழுதும் உழைத்து உழைத்து உரமேறிய அவன் உடலில், இவ்வளவு சோர்வு ஏற்பட்டதேன்? தள்ளாடியபடியே, வந்து சாய்கிறான்! அணைக்க ஓடுகிறாள், செல்வி. கட்டிப்பிடிக்கிறாள், கணவனை. அவனோ 'அன்பே! அமுதமே!' என்று கொஞ்சவில்லை. 'ஐயோ! என்னைத் தொடாதே!' என்று அலறுகிறான். ஏன்? செல்வியைப்போல் அவனது உடம்பை ஆச்சாரியாரும் உற்றுப் பார்த்தால் தெரியும். உழைத்து உழைத்து அவன் கண்ட பயன்? ஒருபடி நெல் அதிகம் கேட்டான், மிராசுதாரை! மிரட்டினார் — கெஞ்சினான். தன் கையிலிருக்கும் சாட்டை போதாதென்று, சர்க்காரின் போலீஸ் தடியையும், துணைக்கழைத்தார். அதனால், உத்தமன் அலறுகிறான்! செல்வி அழுகிறாள்!! — சின்னான், உழைக்காதவனா?

ஏகாம்பரம் வீடு

"வேலன், வருவாரோடீ?" என்று இசை விழாவில் கோகில கானம் பாடுவது கேட்டுக் கொண்டிருக்கிறது, ஒலிபெருக்கியில்! வீட்டு வாயிலில், உட்கார்ந்தபடி, 'இன்னும் அவரைக் காணவில்லையே!', என்ற ஏக்கத்தோடு, உட்கார்ந்திருக்கிறாள், எல்லம்மாள். எல்லம், ஏகாம்பரத்தின், மனைவி. ஏகாம்பரம், காலையிலே புறப்பட்டவன். இரவு முழுதும் விழித்து, எல்லமும் ஏகாம்பரமுமாகச் சேர்ந்து, நெய்த வேஷ்டிகளை எடுத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டவன் — இன்னும் வரவில்லை. குழந்தைகள், மூன்று. மூலையில், பசிவேதனையால், முனகிக் கொண்டு கிடக்கின்றன. எல்லம், உள்ளே குழந்தைகளைப் பார்ப்பதும் வீதியைப் பார்ப்பதுமாக உட்கார்ந்திருக்கிறாள். வேதனைச் சுமையேந்தியவனாய், ஏகாம்பரம், திரும்பி வருகிறான். அவன், அவளைப்பார்க்கிறான். எடுத்துப் போன வேட்டி, கையில் அப்படியே, இருக்கிறது. பதிலா, சொல்லவேண்டும்? ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர். இரவு முழுதும் கஷ்டப்பட்டு உழைத்து, முடித்த ஆடை. விலை போகவில்லை. இருவர் விழியிலும், ஒளியில்லை! கண்ணீர்க் கடல் காட்சி தருகிறது!! உழைக்காதவர்களா, இவர்கள்?

ஆபீஸ்பியூன் ஆறுமுகம்

"டேய்! ஓடிப்போய், 'கூல்-டிரிங்' கொண்டுவாடா"

*

"முட்டாள். அப்படியே, அந்தக் குமாஸ்தாவிடம், அந்தப் 'பைலை' வாங்கி வந்தால் என்னடா?

*

"உலக்கைக் கொழுந்தே! ராத்திரியெல்லாம் விழிச்சுக்கிட்டிருக்காமே, தூங்கினாயாமே. தூங்குவதற்குப் பெயர்தான், காவலோ?"

*

"போடா! போய், இந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டுவா. சாப்பிடணுமென்னு, சொல்லவிலைக்கிறியா. எல்லாம், அப்புறம், சாப்பிடலாம். சாப்பாடு ஒண்ணும் ஓடிசில்லே! போ, போ!"

*

"சைகிளை எடுத்து, துடையடா, தாக்கிரி! இதுகூட, நான், சொலலிக் கொண்டே இருக்க வேண்டுமோ?"

பெட்டிக்கடை பெருமாள்

"அண்ணாச்சி! விடியறத்துக்கு முன்னே, கடையைத் திறப்பேங்க.

காலங்காத்தாலே ரயிலுக்குப் போறவங்க, காலணா அரையணாவுக்கு வியாபாரம் செய்யமாட்டாங்களாங்கிற ஆசைதான். மணி 8 ஆனதும், ரயிலடிக்கு ஓடி, பேப்பர் கட்டு எடுத்துக்கிட்டு வருவேன். பிரிச்சதும், பெரியமனுஷங்க வீட்டுக்குப்போய் போட்டுவிட்டு ஓடி வருவேன். மணி பனிரெண்டுக்கு. மசால்வடை — முறுக்கு — கடலை உருண்டை தயார் செய்வேன், அதிலும் நாலணா, ரெண்டணா வரும் பாருங்கோ! மூணு மணியானா, அடுப்பை மூட்டி, தேத்தண்ணி, சுடவைப்பேன்—ஒரு ரூபா, அரை ரூபா கிடைச்சா, லாபம்தானே. இடையிலே, பீடி சிகிரெட், வெற்றிலை—இதுக்காக, கடைத்தெருவுக்கும் போய் வருவேன். இரவு 8-மணிக்கு பால் வாங்கப்போவேன். மணி 10-க்கு பாலைக்காய்ச்சி வச்சுகிட்டு உட்காருவேன்! கால், அரை, கிடைச்சா பயலோடே பள்ளிக்கூடச் சம்பளத்துக்கு ஆகும் பாருங்க!!''

ஆசிரியர் ஆத்மநாதர்

சொல்ல, என்ன இருக்கிறது? நானே ஒரு நடமாடும் பிணம் தான்!''

குமாஸ்தா குப்புசாமி

''பெயரைச் சொல்ல வேண்டாம்—என் உத்யோகத்தைச் சொன்னாலும் போதும்!''

* * *

இங்கே, கண்டவர்கள் யாவரும், உழைக்காமல் உட்கார்ந்திருப்பவர்களா? இன்னும் காணவேண்டிய இடங்கள், பல உண்டு. பல என்ன—அநேகமாக, நாடு முழுமையுமே அப்படித்தான். ஆனால், ஆச்சாரியாருக்கு, அவைகளைக் காணுமளவுக்கு அவகாசம் இராது! ஏனெனில் காலையில் சந்தியா வந்தனம், மாலையில் ஆடல்பாடல்ரசனை, இப்படி ஏதாவது இருந்தபடியே இருக்கிறது. ஆகவே மேலே சந்தித்தவர்களைப்பற்றி மட்டும், கூறட்டும். இவர்கள், உழைக்காதவர்களா? அருமையான நாற்காலியில், மின்சார விசிறி சுழல, வீசும் வெயில் உள்ளே நுழைய முடியாதபடி குளிர்ச்சி வசதி அமைக்கப்பட்ட அறையில், குஷாலாக அமர்ந்திருக்கும் டாடாக்களா, இவர்கள்! அல்ல, அல்ல. அனைவரும் உழைப்பவர்கள். ஆலைத் தொழிலாளி, மூட்டை தூக்கி, ரிக்ஷா இழுப்பவன், நடையிலிருப்பன், இட்லி சுட்டு விற்பவள், வீதியில் விலைகூறி விற்பவள், கண்டக்டர், போலீஸ்காரர்......இவர்களையெல்லாம், உல்லாசிகள் என்று, கூறிவிட முடியும்? உழைக்கிறார்கள்! உடல் தேய, ஒருவகையினர் உழைக்கிறார்கள். உடலும் மூளையும் தேயத் தேய மற்றோர் வகையினர் பாடுபடுகிறார்கள். இருவகையினரும், இதற்குப் பிரதி பயனாக, மாளிகை வாசத்தை அனுபவிக்கவில்லை! மந்தகாசமான வாழ்வில் திளைக்கவில்லை! பட்டினி—அடி—கண்ணீர்—கடன் சுமை—இவ்வண்ணம், [illegible] பல கொட்டிக்கொண்டேயிருக்க, சித்ரவதைப்பட்டுச் சிதைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி, சின்னபின்னமடைவோர்தான், அதிகம். ஆச்சாரியாரின் கணக்குப்படி, உழைக்காதவர்கள் அல்ல, நாட்டிலிருப்பது. உழைக்கிறவர்கள்! உடலையும் உழைப்பையுமே, நம்பி, வாழ்கிறவர்கள் அப்பன் சம்பாதித்துவைத்துப்போன சொத்தைப் பெற்று, சொகுசாக வாழ்வோர், அதிகமில்லை, நாட்டில். கையையும் காலையும் நம்பி உழைத்து வாழ வேண்டியோர்தான், அதிகம் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் நிலை, என்ன? உழைத்தால், போதிய பலன் கிடைப்பதில்லை! அவர்கள் குழந்தைகள் பெரியவர்களாகி, உழைக்க இடம் தேடினால் வேலை கிடைப்பதில்லை!! இத்தகைய விசித்திரமான, நிலையில் நாடிருக்கிறது. ஆனால், ஆச்சாரியார் அறிவுரை வழங்குகிறார், எல்லோரும் உழைக்க வேண்டும் என்பதாக.

அறிவுரையின் முக்கியத்தை அறியாமலில்லை, நாம். அவசியம்உழைக்க வேண்டும் எல்லோரும். ஆனால், 'உழைக்கிறேன் — வேலை கொடு', என்று கேட்கும் வாலிபர்களுக்கு, உழைக்க இடம் எங்கேஇருக்கிறது? இதனால், வாழமுடியாத வாலிபர்கள், என்னென்ன சமுதாயக் கேடுகளுக்குக் காரணமாகிறார்கள்? திருடன் — குடிகாரன் — கொலைகாரன்—தீயவன்—இப்படி பட்டியல், விரிந்துகொண்டே, போவதற்குக் காரணம், இந்த வாலிப பட்டாளமன்றி, வேறென்ன? இவர்களெல்லாம், உழைக்கமுடியாது, என்றுசொல்லுகிறார்கள்!

வேலைதேடி, வேலைதேடி, வியர்வையைக் குளமாக்கி, வெந்து நொந்து, தண்டவாளத்தில் தலைவைத்து உயிரை இழுக்கும் இளைஞர்கள் தொகை பெருகிடக் காரணம், என்ன? அடர்ந்த வயல்களும், நிறைந்த சோலைகளும், பூமிக்கடியில் பொன்னும், தோண்டினால் சுரங்கங்களும், காணக் கூடிய நாட்டில், இவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை! வேலை கிடைக்கவில்லை! என்றால், ஒரு வேலையும் கிடையாது, இனிச் செய்வதற்கே வேலைகள் கிடையாது என்பதல்ல பொருள். நாட்டின் நிலையும் அப்படிப்பட்டதல்ல. நாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும், கிடைத்து விடவில்லை; இன்னும் எவ்வளவோ பொருள்கள் தேவைப்படுகின்றன. அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான, ஆலைகளும், வெட்டியெடுக்கப்பட வேண்டிய சுரங்கங்களும், ஏராளமிருக்கின்றன. அவைகளைப் பற்றிக் கவலையெடுத்துக்கொண்டால் அலையும் வாலிபர்களின் துயரம் போக்கலாம்—நாடும், தளிர்ச்சோலையாகும். எனவே—செய்யப்பட வேண்டிய வேலைகள், நிறைய இருக்கின்றன; செய்வதற்கு வேண்டிய மனித சக்தியும் ஏராளமிருக்கிறது; ஆனால், இவைகளைப் பயன்படுத்தும், மார்க்கம்தான் இல்லை! இந்த மார்க்கத்தை வகுக்கவேண்டிய மகானுபவர், போதனை புரிகிறார்—உழைப்பு இல்லையாம்; வேண்டுமாம்.

*

''காலம், கலியேன்னோ! கண்டவனும் உத்யோகஸ்தனாகப் பார்க்

உழைப்பாளி

உழைப்பாளர் கட்சித் தலைவர் தோழர். S. S. ராமசாமி M. L. A. அவர்களைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு கடலூரிலிருந்து வெளிவரும் மேற்படி இதழினை வரவேற்கிறோம். உழைப்போர் உரிமைக்காகப் பாடுபட முன்வந்துள்ள மேற்படி இதழை வாழ்த்துகிறோம்.

கிறான்: படிக்கணும்—பாஸ் செய்யணும். நாற்காலியில் உட்கார்ந்தபடி சம்பளம் வாங்கணும் அப்படீங்கிற ஆசை பெருத்திண்டே போறது. இதனால், உழைக்கணும்கிற ஆர்வம் குறைஞ்சுண்டே போறது. உழைச்சாத்தானே, தேசம், செழிக்கும். உழைக்காமல், எல்லோரும், உத்யோகம் பார்க்கணும்னு கிளம்பினா, என்ன செய்றது? ஆதலால்தான், மகாஜனங்களே! நான், உழைப்பை அபிவிருத்தி செய்யக்கூடிய கல்வித் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தேன். எல்லோரும், ஆட்சேபிக்கிறா! பலாப்பழத்துக்கு மேலே உள்ள தோல், கொஞ்சம் கரடுமுரடாத்தான் இருக்கும். ஆனா, சுளை, எவ்வளவு ருசி! என்யோசனைகளும், சுளையைப் போன்றதுதான்."

ஆச்சாரியார், உழைப்பின் மேன்மையை விளக்க, இந்தக் கருத்துடனும், பிரசங்கங்கள் செய்கிறார். உழைப்பை விரும்பாது, உத்யோகம் பார்க்கவே எல்லோரும் விரும்புகிறார்களாம்! மக்களுக்குள்ள இந்த ஆசைக்குக் காரணமான படிப்பின் பக்கத்திலிருந்து அவர்கள் கவனத்தைத் திருப்பிவிட்டால், உழைப்பின்மீது ஆசை வந்துவிடுமாம்!! தன்னுடைய சூது நிரம்பிய கல்வித் திட்டத்துக்கு, அவர் கூறும், புது வியாக்யானம் இது.

பொருளற்றது என, மறுக்கவில்லை, நாம். மக்கள் மனதில், உத்யோகம் பார்க்கவேண்டும் என்கிற ஆசை இருக்கிறதென்பதையும், மறுக்கவில்லை—உழைப்புக் குறித்து உற்சாகம் குன்றி வருகிறதென்பதையும், நாம், மறுக்கவில்லை, ஆனால், இதற்கு ஆச்சாரியார், கூறும் வியாக்யானம் இருக்கிறதே, அது விஷம் தோய்ந்ததென உரைக்கிறோம்.

உழைப்பதற்குப்பதில், உத்யோகம் பார்க்கும் ஆசை, அதிகமாகிறது, மக்களுக்கு. ஏன்? கல்வியா, காரணம்—அல்ல, அல்ல — கல்வி கற்றும் உழைத்துப் பலன் பெறுவோரை, ரஷ்யபூமியில் பார்க்க முடிகிறது. எனவே, படிப்பல்ல, காரணம்—அதைவிட, வேறொன்று உள்ளது, அந்தக் காரணத்தை, எண்ணவும், மறுக்கிறார், ஆச்சாரியார்.

மனிதனுக்கு, உழைத்து வாழ்வதைவிட, உத்யோகத்தின்மீது ஆசை திரும்புவானேன்? ஆரம்பத்தில் பயணம் சென்றோமே, அவர்களைச் சிறிது, கவனப்படுத்துவோம் சின்னான்—ஏகாம்பரம்— பியூன் — இவர்கள் உழைத்தவர்கள்! பெற்ற பலன்? அடி, உதை, பசி, பட்டினி. இவர்கள் மனதில், 'நாமும் கலெக்டரானால்!' 'நாமும் வக்கிலானால்!'என்கிற ஆசை எழும்பாமலா இருக்கும்! ஓடியாடி, நாள்முழுதும் அலைந்து ஒரு அணா சம்பாதிக்கும், ஏழையின் இதயத்தில் உட்கார்ந்தபடியே ஒரு ரூபாய் பெறும் வசதியைப் பெறவேண்டும் என்கிற ஆசை அரும்புவதில் தவறென்ன? இதற்குப் பதில், உட்கார்ந்த இடத்திலிருந்து சம்பாதிப்பதென்றால் ஒரு அணாதான் கிடைக்கும் — ஓடி ஆடி அலைந்தால் ஒரு ரூபாய் கிடைக்கும் —என்கிற நிலைமை இருந்தால், சின்னானும், ஏகாம்பரமும், உத்யோகம் பார்க்கவா, ஆசைப்படுவார்கள்! படித்த இளைஞர்களும், உத்யோக வேட்டைக்கா, புறப்படுவார்கள்? அவரவரும், உழைத்தால் அதிக ஊதியம் பெறலாம், அதனால் சுகமான மாளிகையில் வசிக்கலாம் — என்று அறிந்தால், உழைக்க முன் வருவார்கள். ஆனால்இன்றுள்ளநிலை, அதுவா? இல்லை! இல்லை!! எனவே தான், உத்யோகம் பார்க்கவேண்டும் என்கிற ஆசை, வளர்ந்து வருகிறது. இந்த ஆசை வளராமலா இருக்க முடியும்? மனிதர்கள்என்ன மும்மலம் நீக்கி முக்தி பெறுவதையே லட்சியமாகக்கொண்டா, கிடக்கின்றனர். உருளும் உலகில், அவனவனும், வாழவேண்டும் — நன்றாக வாழவேண்டும் என்று கவலைப்படுகிறான். அதனாலேயே, அங்காடிக்கடை அம்மாளு, பிச்சையெடுத்தாவது தன் மகனைப் படிக்க வைக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்—உஞ்சி விருத்தி எடுக்கும் கனபாடிகள், நாலுபேர் காலில் விழுந்தாவது, பையனை, தாசில் உத்யோகத்துக்குத் தயாரிக்கவேண்டுமெனக் கனவு காண்கிறார். ஏழைகள், இன்பமாக இருக்கலாம், என்கிற ஆசையை அணை போட்டுத் தடுத்திட, ஆச்சாரியாரின் உபதேசம் பயன்படவா, முடியும்? வேண்டுமானால், 'உழைப்பின்மேன்மையை உத்தமர் உரைக்கிறார்', என்று பத்திரிகைகள் பெரிதாக்கிப் பிரசுரிக்கப் பயன்படுமேயன்றி, வேறெதற்குப்பயன்? இவ்வண்ணம், உழைப்பின் மேன்மை குறித்து உபன்யாசம் செய்வோரின் குடும்பத்தையெல்லாம், எடுத்துப்பாருங்கள்! காந்தியடிகளைவிட கர்மவீரர் இருக்கமுடியாது—ஆனால் அவரது மகன் தேவதாஸ், தந்தையின் லட்சியப்படி தக்ளியும் ராட்டையுமாக சுமந்துகொண்டு, ஏரைப் பிடித்துப் பாரைச் சீர்படுத்தும் பணியிலா, இருக்கிறார்? பிர்லாவின் பேனாவாக, பெரியதோர் பங்களாவின்வாசியாகத்தான் திகழ்கிறார்! பண்டிதநேருவின் மருமகனார்—பிரோஸ்காந்தி—உழைப்பின் மேன்மையை விளக்கும் சின்னமாகவா, விளங்குகிறார்? விஜயலட்சுமி பண்டிட்—உலக மேதை—சொன்மாரி பொழியும் செல்வி —

வெளிவந்துவிட்டது!

வன மாளிகை

அழகிய வர்ண அட்டைப்படத்துடன் கூடியது

திட்டியவர்: எஸ். செல்லப்பாண்டியன்

பிரதி விலை 0—9—0

வணிகருக்கு 25% கழிவு. தபாற்செலவு தனி.

மாதிரி வேண்டுவோர் 10-அணா M. O. மூலம் அனுப்புக.

கிரீன்லாஃப் பப்ளிஷிங் ஹவுஸ்

செய்யதுபள்ளிவாசல் தெரு,

தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

தயாராகிறது!

சி. என். ஏ. தீட்டிய

'பொன்னொளி'

விபரங்களுக்கு:

பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

அவரது குமாரிகள் கல்வி கற்பது, சேவா கிராமத்தில் அல்ல; ஸ்விட்ஸர்லாந்தில்!

இவ்வண்ணம், இத்தலைவர்களின் குமாரர்களும், குமாரிகளும், உத்யோகங்கள் வகிக்கிறார்கள். இதைத் தவறென்று, வாதிட வரவில்லை நாம். இத்தகைய உத்யோகங்களைப் பெற்றால்தான் சுகமாக வாழ முடியும், என்கிற சமுதாய அமைப்பு இருக்கிறது. இந்த ஆசை அதிகமாவதற்குக் காரணம், எது? சமுதாய அமைப்பு! இந்த அமைப்பை மாற்றாமல் 'முடியாது! முடியாது!! உழைப்பே, சிலாக்யம். உழைத்தே வாழ்வேன்,'' என்று ஒருவன் கூறிக்கொண்டு வாழமுயன்றால், சின்னாட்களில் வறுமைத்தேள் கொட்டும்—பசிப்பாம்பு கொத்தும்—பிணி வளைக்கும்—பிணக்காடு செல்வான் எனவே, தனிப்பட்டோர், இன்றிருக்கும் சமுதாய அமைப்பை எதிர்த்து நீச்சலாட முயன்றால், அவர்களைக் காட்டாறு மூழ்கடிக்குமேயொழிய—அவர்கள், மீள முடியாது. இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. 'உழைக்க வேண்டும்', என்று பிறருக்குபதேசிக்கும் அன்பர் ஆச்சாரியார் ஒருமுறை தன்னுடைய நெஞ்சின் மேல் கையைவைத்துச் சொல்ல வேண்டும். அவருக்கு ஆதரவு தேடிடும் படையிலிருக்கும் 'வடபாதி மங்கலம்', வைத்திருக்கும் நிலபுலன்கள், ஏராளம்—ஆனால், அவரை, உழைக்கச் சொன்னதுண்டா, ஆச்சாரியார்? வருவோர் போவோரை வரவேற்று, முடியில்லாத மன்னனாக வீற்றிருக்கும், முத்தையா செட்டியாருக்கு, என்றாவது ஒரு நாள் எடுத்துச் சொன்னதுண்டா, இந்த உபதேசத்தை? அவர்கள், தென்படுவதில்லை, அவருக்கு; ஆனால், மக்கள் தென்படுகிறார்கள்!! அதிலும், உழைத்து உழைத்து உருக்குலைந்து போன, மக்கள்.

மார்க்கத்தை வகுக்காமல், மக்கள் மன்றத்தில், உபதேசம் புரிவதேன், இந்த உத்தமர் குழாம்?

உழைப்போரின் ஊதியம் அதிகம் — உத்யோகம் பார்ப்போரின் சம்பளம் குறைவு — இவ்வண்ணம், சமுதாய அமைப்பை, ஆட்சியேறியோர் அமைக்க முடியும். அதைச் செய்வதை விட்டு, வேலை செய்து வாடும் வாழ முடியாதவர்களுக்கு, உபதேசம் புரிகிறார்! உழைக்க வேண்டுமாம்—அப்படி உழைத்தால் உலகத்தையே மிரட்டலாமாம்—எல்லாம் இருக்கிறதாம், இந்த ஒன்று மட்டும் இல்லையாம் பிரச்னைகளை அறியாதவரல்ல, ஆச்சாரியார். உழைக்க வேண்டும்!—என்று அவர் கூறும் உபதேசத்தை மனதில் கொண்டு, ஆலைகளில் பாடுபடும் தொழிலாளர்கள், வாயுவேகமனோவேகமாக உழைக்கச் சென்றால், முதலாளிகள் வரவேற்கவா, செய்கிறார்கள்? அதோ! ஆமதாபாத்தில், ஆலைகள், கதவடைப்பு—காரணம்? உற்பத்தி செய்த ஆடைகள் விற்கவில்லை! இதோ, கோவை ஆலையில், ஆட்குறைப்பு—காரணம், மில்களுக்கு வருமானம் இல்லை. இப்படிக் கூக்குரல், வருகிறது. இந்தலட்சணத்தில், உபதேசங்கள் புரிகிறார். நாடு, மார்க்கங்களை, விரும்புகிறது—ஆனால் மந்திரியானோர், உபதேசங்களைப் பொழிகிறார்கள். மானும் புலியும் உலவும் கூண்டுபோல, இருக்கும் இன்றைய சமுதாய அமைப்பில், உபதேசம் பலன் தராது—நல்ல உள்ளம், வேண்டும். அது, ஆச்சாரியார் குழாத்துக்கு, அரியதோர், பொருள். ஏனெனில், இன்னோரிடத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார், அவர் — "பழைய சம்பிரதாயங்களைக் கட்டிக் காத்துவர, என்னாலானவரைப் பாடுபட்டு வருகிறேன்'' என்பதாக.

இவரிடம், நல்லெண்ணமா, பிறக்கும்? சின்னான் கண்ணீர், ஏகாம்பரம் ஏக்கம், இவரால் தீராது!—இவரது ஆட்சியாலும் முடியாது—அதற்கோர் ஆட்சி முறை வேண்டும்! அன்றுதான், உழைப்போர், வாழ்வர்—உழைப்பும், பெருகும்.

பொதுச் செயலாளர் சுற்றுப் பயணம்

பிப். 7 மாலை, திருப்பத்தூர் (வ. ஆ) தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்

பிப். 8 கிருஷ்ணகிரி– தூத்துக்குடி நிதிஅளிப்புக் கூட்டம்

பிப். 9 போளூர் (வ. ஆ.) தூத்துக்குடி நிதி அளிப்புக்கூட்டம்

பிப். 14 தென்னாற்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

பிப். 15 சென்னையில் — திருமணம்

பிப். 16 முதல் 19 வரையில்; தஞ்சை மாவட்டம்: நாகப்பட்டணம், மன்னார்குடி, குடவாசல், கும்பகோணம் ஆகிய இடங்களில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

பிப். 21 மதுரை நகர் தி. மு. கழகப்பொதுக்கூட்டம். இரவு நாடகம்

பிப். 22 பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நினைவுவிழா—இரவு நாடகம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

பிப். 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.